# உதயம்

நிறுவியவர் :

**கன்னிக்கண்ணன்**

ஆசிரியை :

**சகுந்தலா கிருஷ்ணன்**

ஒளி-10 | ஜுலை—1964 | கதிர்-4



மறைந்தும் வாழும் மாவீரன் ! (தலையங்கம்)— 1

காமராஜ் மலர் - ஒரு விளக்கம் (உப தலையங்கம்)—2

ஜவாஹர்லால் ஒரு சர்வாதிகாரி ! ('சாணக்கியா')— 3

நேருஜிக்குப் பிறகு யார் ? (அக்கம்பக்கம்)— 7

மேல்சபையில் கலைஞர் சுந்தரம்—11

'ப்ரீ இந்தியா' கோவிந்தன்— 12

பஞ்சாமிர்தம் — 13

அமரர் நேருவின் அமர காவியம் !— 15

அனிச்சப்பூ (எழில் முதல்வன்) 17

மதன வல்லபி ('தமிழ் மன்னன்')— 29



'உதயத்'தில் வெளியாகும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே. எவரையும் குறிப்பிடுவன அல்ல.


# மறைந்தும் வாழும் மாவீரர்!

"நீ வாழ்கிறபோது எத்தனை பேர் உன்னுடன் சேர்ந்து சிரிககிறார்கள் என்பதைவிட, நீ இறந்த பின்பு எத்தனை பேர் உனக்காக அழுகிறார்கள் என்பதில் தான் உன் மகத்துவம் அடங்கியிருக்கிறது" என்றான், ஒரு மேலை நாட்டு அறிஞன்.

அவன் வார்த்தையை மெய்யாக்கி மறைந்த மேதைகள், மேதினியிலே வெகு சிலர்தான். அந்த வெகு சிலரில் சிகரமாக நேருஜி விளங்குகிறார் என்றால், அது மிகையல்ல. நேரு இறந்தார் என்று யாருமே எண்ணவில்லை. மேரு மறைந்தது என்று தான் உலகமே கண்ணீர் உகுத்தது.

உலகத்தின் ஜனத்தொகை இருநூற்றி அறுபது கோடி என்றால், அதிலே உத்தமன் மறைவு கேட்டு குளமாகாத கண்கள், கை விரல்களிலே அடங்கும்.

அந்த ஆசிய ஜோதியைக் கண்டவர்கள் மட்டு மல்ல, காணாத வெளி கண்டத்தவர்கூட, நெஞ்சத்து வேதனையை சுருங்கிய முகம் காட்ட, அந்த உத்த மனின் கொள்கை காக்க குருதி கொட்டவும தயங் கோம் என்று சூளுரைத்து நின்ற காட்சி, மறைந்த மாவீரனின் மாட்சிககோர் சாட்சியாக விளங்குகிறது.

சாக்ரடீஸ் விஷமிட்டுக் கொல்லப்பட்ட பின்பு ஈராயிரம் ஆண்டுகளாக, கிரேக்கம் ஒரு சாகரடீஸை தேடிக் கொண்டுதான் இருசகிறது. நேருஜிககும் பின்பு, யுகயுகாந்திரமாக உலகத்து மக்களனைவரும் அழுதழுது கண்ணீர் வடித்துக் கரைந்தாலும், இன் னொரு நேருஜி கிடைக்கப் போவதில்லை.

அரசியல் வாதிகளில் அந்த மாமேதை ஒரு துருவ நட்சத்திரம்.

எழுத்துலகத்துக்கு அவன் ஒரு வேந்தன். எண்ணத் தொலையாத துறைகளில், ஈடும் எதிர்ப்பு மின்றி ஒளி வீசி வந்த உன்னத தீபம்.

நேருஜி மறைந்து விட்டார் என்ற சேதியை எண்ணிபபார்க்க மனம் கூசுகிறது. எழுதிப் பாரகக கரம் அஞ்சுகிறது. ஆயிரம் நினைவுகள் வருகின்றன, அந்த ஆறறலரசரைப்பற்றி.

எதை நினைத்து ஆறுதல் கொள்வோம்? என்ன சொல்லி மனதைத் தேற்றுவோம! இந்தியாவுக்கு விடுதலை தந்தால், இந்தியாகள, தங்களைத் தாங்களே

ஆளத் தெரியாமல் அழித்துக் கொள்வார்கள் என்றனர், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வெறியர்கள். அந்த ஆதிக்க வெறியர்களின் பேச்சைப் பொய்யாக்கி புதை குழிக்குச் செல்லாமல், இந்தியாவை அணைத்துக் காப்பாற்றிய பெருமை, நேருஜியின் பல சிறப்புகளில் தலையானஒன்று.

இனி, அப்படி யொரு தலைவனை எங்கே காணப் போகிறோம்? என்று காணப் போகிறோம?"எப்படி காணப் போகிறோம்?

இறைவா!

இந்தியா நன்றாய் வாழ வேண்டுமென்பதில் உனக்கு விருப்பமில்லையா?

அந்த உத்தமன் உயிரை நீ பறிக்காமல் விட்டிருந்தால், அதற்குப் பதிலாக பத்துகோடி உயிர்களை உன் திருவடியில் பரிசாக கொட்டியிருப்பார்களே, பாரத மக்கள்!

நடக்க முடியாதது என்று நாம் இறுமாந்திருந்த, நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. இனி நடக்க வேண்டியவையாவது நல்லனவாக நடக்கட்டும்! நேருஜி தன் வாழ் நாளில் எந்தக் கொள்கைகளை, தன் நெஞ்சோடு நெஞ்சாக வைத்து போற்றிப் பாதுகாத்தாரோ, அந்தக் கொள்கைகளை நாமும் போற்றுவோம்—பாதுகாப்போம்—அவற்றை நிறைவேற்ற இன்னுயிரையும் தரத் தயாராவோம்! அதுதான் அந்த அஜந்தா ஓவியத்துக்கு நாம் செலுத்தக் கூடிய அற்புதமான இரங்கல் மரியாதை "மன்னர் இறந்து விட்டார்! மன்னர் நீடூழி வாழ்க!" என்பது இங்கிலாந்து நாட்டில் மன்னர் இறக்கும் போது முழங்கப்படும் பாரம்பரிய ஸ்லோகம். "நேருஜி இறந்து விட்டார்! நேருஜி நீடூழி வாழ்க!" என்று 260 கோடி வாய்கள் முழங்குகின்றன. அந்த வஞ்சமறியா வாய்களுடன், உதயமும், மறைந்த மாவீரனுக்கு வீர வணக்கம் செலுத்தும் முறையில் சேர்ந்து கொள்கிறது.

# காமராஜ் மலர் — ஒரு விளக்கம்!

*இந்தியத் தாயின் இணையற்ற புதல்வன் பண்டித நேருவின் நேரடி வாரிசு, தமிழகம் தந்த தவச்செல்வன் திரு. காமராஜ் அவர்களின் பிறந்த நாளை கொண்டாட வேண்டுமென்ற ஒரு நினைவை, எண்ணத்தை தமிழகத்தில் உண்டு பண்ணிய பெருமை உங்கள் 'உதயம்' ஒன்றுக்குத்தான் உண்டு என்று சொல்வதில் 'உதய'த்திற்கு உரிமை உண்டு.*

*1960 ஜூலை மாதத்தில் 'உதயம்' காமராஜ் மலர் வெளியிட்டதைத் தொடர்ந்துதான் தமிழகத்தில் காங்கிரஸ் காரர்களும, மற்றோரும் காமராஜ் பிறந்த நாள் விழா நடத்த முன் வந்தார்கள். பொது மக்களின் தலைவனைப்பற்றி பொது மக்கள் தெரிந்துகொள்ள முடியாதபடி அவர்கள் கைக்கு எட்டாத வகையில் மலர் வெளியிட்டு தங்களுக்கு பெருமை தேடிக் கொண்டவர்களும் தமிழகத்தில் உண்டு.*

*1960 திலிருந்து 'உதயம்' மறுபிறவிஎடுத்த நாளிலிருந்து அதற்கென ஒரு தமிழ் மலர் உண்டென்றால் அது காமராஜர் மலர்தான்!*

*அதைத் தொடர்ந்து ஆண்டு தோறும் நமது அருமைத்தலைவர் காமராஜ் அவர்களின் பிறந்த நாளை யொட்டி ஜூலை திங்களில் மலர் வெளியிட்டு இந்த நல்ல நாளைக் கொண்டாடும் 'உதயம்' இந்த ஆண்டும் மிகச் சிறப்பான முறையில் காமராஜ் மலர் வெளியிட முனைந்து முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. இந்த நல்ல நேரத்தில்தான் இந்திய மக்களின் தலையில் இடி விழுந்தாற்போல் நமது அருமைத் தலைவன் உலகப் பேரொளியான பண்டித நேருஜியின் மறைவு நம்மை தாக்கியதோடு நம்மை நிலைகுலைத்து ஸ்தம்பித மாக்கி விட்டது. எழுதக் கரங் கூசும் இந்த சோக சேதியின் நடுவே ஒரு சுபகாரியத்தை நம்மால் செய்ய முடியவில்லை. எனவேதான் ஜூலை*

# ஜவாஹர்லால் நேரு ஒரு சர்வாதிகாரி!

நம் மதிப்பிற்குரிய நேருஜியை ஒரு கர்வி என்றும் வேடதாரி என்றும் சீசரைப்போல் ஒரு சர்வாதிகாரியாகக்கூட ஆகிவிடக் கூடிய ஒரு எதேச்சாதிகாரி என்றும் கடுமையாக தாக்கி எழுதும் இந்த கட்டுரை ஆசிரியருக்கு என்ன துணிச்சல்? யார் இந்த கட்டுரை ஆசிரியர்! முடிவில் காண்க!

*ராஷ்ட்ரபதி (காங்கிரஸ் அக்கிராசனர்) ஜவாஹர்லால் கி ஜய்! காத்திருந்த கூட்டத்தைக் கடந்து வேகமாகச் சென்ற ராஷ்டிரபதி திரும்பிப் பார்த்தார். கைகளை உயர்த்திக் குவித்து வணக்கம் செய்தார். அவருடைய வெளிறிய கடுமையான முகத்தில் புன்முறுவல் படர்ந்தது. அது அன்பு நிறைந்த புன்னகை. அதைக் கண்ட மக்கள் பதிலுக்குத் தாங்களும் புன்முறுவல் பூத்து ஆரவாரம் செய்தனர்.*

*கூட்டத்தில் சந்தோஷ ஆரவாரத்தைத் தூண்டிய அந்தப் புன் சிரிப்பு அந்த உணர்ச்சி வெள்ளத்தின் மத்தியிலேயே மறைந்து முகம் மீண்டும் கடுகடுப்பாகி விடுகிறது. அந்தப் புன்சிரிப்பிலும், அதோடு சேர்ந்து வந்த சமிக்ஞையிலும் உண்மை இல்லை என்று தோன்றுகிறது. அவர் மீது அன்பைப் பொழியும் ஜனக் கூட்டத்தின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக அவர் கையாளும் வெறும் வியாபார தந்திரம். அது அப்படித்தானே?*

*மீண்டும் அவரைக் கவனியுங்கள். பிரும்மாண்டமான ஊர்வலம் நடக்கிறது. பதினாயிரக்கணக்கான மக்கள் அவர் காரைச் சூழ்ந்துகொண்டு ஆனந்த ஆரவாரம் செய்கின்றனர். காரின் ஆசனததில் ஆடாமல் அசையாமல், விறைப்பாக, நெட்டையானவர் போல், கூட்டத்தின் ஆரவாரத்தினால் பாதிக்கப்படாத ஒரு தேவதை மாதிரி சாந்தமாக நிற்கிறார். மீண்டும் அந்தப் புன்முறுவல், அல்லது மகிழ்ச்சி நிறைந்த சிரிப்புத் தோன்றுகிறது. கடுகடுப்பு மறைந்து விட்டதாகத் தோன்றுகிறது. கூட்டமும் எதற்காகச் சிரிக்கிறோமென்று தெரியாமலே அவருடன் சேர்ந்து சிரிக்கிறது. இப்பொழுது அவர் தேவதைபோல் இல்லை. சாதாரண மனிதன் போல், தம்மைச் சுற்றியுள்ள பல்லாயிரக்*

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

---

*15-ம் தேதி வரவேண்டிய காமராஜ் மலரை வெளியிடும் நம் எண்ணத்தையும் கைவிட்டோம்.*

*இந்த நேரத்தில் 'உதயத்'தின் இதயத்தின் இதயங்களான எண்ணற்ற நண்பர்கள் உறங்கிக் கிடந்த 'உதயத்'தின் உணர்ச்சியை தட்டிவிட்டு ஜூலை போனால் போகட்டும் ஆகஸ்ட் 15-ம் தேதி யாவது காமராஜர் மலரை கொண்டு வரவேண்டும், கொண்டு வந்தே ஆகவேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டார்கள். மீண்டும் 'உதயம்' சிந்தனையில் ஆழ்ந்தது. ஆம். ஜூலை 15-க்கும் ஆகஸ்ட் 15-க்கும் அதிக வித்தியாசமில்லை. ஜூலை 15-ல் விடுதலை வீரன் பிறந்தான். ஆகஸ்ட் 15-ல் உண்மையான விடுதலையே பிறந்தது. எனவேதான் இரண்டு மாத 15-ம் தேதியையும் ஆகஸ்ட் 15-ம் தேதியோடு இணைத்து அன்றைய தினம் காமராஜரது 62-வது பிறந்த தின மலரை தயாரித்து அன்னாருக்கும், பாரதத்துக்கும் காணிக்கையாக்குவது என்ற முடிவுக்கு 'உதயம்' வந்து விட்டது. சோகத்தினூடே ஒரு சுறு சுறுப்பையும் பெற்று விட்டது.*

*ஆகஸ்ட் 15-ம் தேதி 'உதயம்' தனது சக்திக் கேற்ற வகையில் தரத்தோடும் தன்மையோடும் காமராஜர் மலரைத் தயாரித்து உங்கள் அன்புக் கரங்களில் தவழ விடும் என்று உறுதி கூறிக் கொள்கிறோம்.*

*காமராஜரை தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் அனைவரும் கட்டுரைகள், குறிப்புகள் தந்து மலரைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.*

*விளம்பரங்கள் தந்து மலரை அழகுக்கு அழகு செய்யும் வாய்ப்புடைய நிறுவனங்கள் ஒவ்வொன்றும் குறைந்த பட்சம் ஒரு பக்க விளம்பரமாவது தந்து மலரை சிறப்புறச் செய்ய வேண்டுகிறோம்.*

கணக்கான மக்களுடன் உறவு கொண்டாடு கிறார். கூட்டம் மகிழ்ச்சியுடனும் நேசத் துடனும் அவருக்குத்தான் உள்ளத்தில் இடம் கொடுத்துவிடுகிறது. ஆனால் அந்தப் புன் சிரிப்பு அகன்று, முகத்தில் மீண்டும் அந்த வெளிறிய கடுகடுப்பு வந்துவிடுகிறது.

## உண்மையா, நடிப்பா?

இவையெல்லாம் இயற்கையா அல்லது ஒரு பொதுஜனத் தலைவனின் திட்டமிட்ட தந்திரம் தானா? இரண்டும் இருக்கலாம். நீண்ட காலப் பழக்கம் இப்பொழுது இரண்டாவது இயற்கைக் குணமாகி விட்டது. நடிப்பென்று தெரியாமல் நடிப்பதுதான் மிகச் சிறந்த நடிப்பு. நடிகனின் முகப் பூச்சும் பௌடரும் இல்லாமலேயே ஜவாஹர்லால் நன்றாக நடிக்கக் கற்றுக் கொண்டு விட்டார். பொது மேடையில் பூரண கலை அழகுடன் அவர் அனுயாசமாக நடிக்கிறார். இந்த நடிப்பு அவரையும் நம் நாட்டையும் எங்கு கொண்டுபோய் விடப் போகிறது? அவர் இப்படி ஒரு குறிக்கோள் இல்லாதது போல் தோன்றுவதன் உண்மை நோக்கம் என்ன? அந்த வெளித்தோற்றத்திற்குள் என்னென்ன ஆசைகள், என்ன அதிகாரப் பித்து, என்னென்ன ஆவல்கள் மறைந்து கிடக்கின்றன?

எப்படியிருப்பினும் இந்தக் கேள்விகள் ரசமானவை. ஏனெனில் கவனத்தை ஈர்க்கும் பேர்வழி ஜவாஹர்லால். இந்தக் கேள்விகள் நமக்கு முக்கியமானவை. ஏனெனில் அவர் இந்தியாவின் நிகழ்காலத்துடனும், எதிர்காலத்துடனும் பிணைக்கப்பட்டிருக்கிறார். இந்தியாவுக்கு மகத்தான நன்மை செய்வதற்கோ அல்லது பெருந் தீங்கு விளைவிப்பதற்கோ வேண்டிய சக்தி அவரிடம் உள்ளது. ஆகையால் இந்தக் கேள்விகளுக்கு நாம் பதில் கண்டு பிடித்தாக வேண்டும்.

இப்பொழுது கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களாக அவர் காங்கிரஸ் அக்கிராசனராக இருக்கிறார். அவர் காரியக் கமிட்டியைப் பின்பற்றுபவரென்றும், மற்றவர்கள் அவரை அடக்கிக் கட்டிப் பிடித்து வைத்திருப்பதாகவும் சிலர் நினைத்திருக்கின்றனர். இருந்தாலும் அவர் பொதுமக்களிடையேயும் பலதரப்பட்ட கோஷ்டிகளிடையேயும் தம் சொந்தச் செல்வாக்கைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டே போகிறார். விவசாயிகளுடனும், தொழிலாளர்களுடனும் முதலாளிகளுடனும், வர்த்தகர்களுடனும், தலைச்சுமை வியாபாரிகளுடனும், பிராமணருடனும், திண்டாதாருடனும், முஸ்லீம்கள், சீக்கியர், பார்ஸிகள், கிறிஸ்தவர், யூதர் முதலிய இந்திய வாழ்க்கையை உருவாக்கும் பலதரப்பட்டவர்களுடனும் அவர் தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறார். அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமென்பதற்காக அவர்கள் ஒவ்வொருவருடனும் ஒவ்வொரு மாதிரி பேசுகிறார். அவருடைய வயதுக்கு, அவர் பிரமிப்பூட்டும் சக்தியுடன் இந்த நாடு முழுவதிலும் சுற்றித் திரிகிறார். எங்கு சென்றாலும் அவருக்கு மாபெரும் வரவேற்புகள் கிடைக்கின்றன. வடகோடியிலிருந்து கன்னியாகுமரி வரை அவர் வெற்றி கண்ட சீசரைப் போல் பவனி வருகிறார். இவையெல்லாம் அவருக்கு ஒரு தற்காலிகமான விளையாட்டா? அன்றி ஏதாகிலும் உள் நோக்கத்துடன் செய்கிறாரா? அல்லது அவரே அறியாத ஏதாவது ஒரு சக்தி இப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறதா? அவர் சுயசரிதையில் குறிப்பிடும் அதிகார ஆசைதான் அவரை இப்படி ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டத்திற்குத் தள்ளிக்கொண்டு போகிறதோ? "இந்த ஜன சமுத்திரங்களை என் கைக்குள் இழுத்துக்கொண்டு, என் விருப்பத்தை வான் முகட்டில் நக்ஷத்திரங்களால் எழுதினேன்" என்று அவர் உள்ளூர நினைக்கக்கூடும்.

## அபாயகரமானவர்

கற்பனை திரும்பி விட்டால் என்ன செய்வது? பெரிய நல்ல காரியங்களைச் செய்வதற்கான சக்தியுடன் கூடிய ஜவாஹர்லால் போன்றவர்கள் ஜனநாயகத்தில் அபாயகரா

மானவர்கள். அவர் தம்மை ஜனநாயகவாதி என்றும் சோஷலிஸ்ட் என்றும் சொல்லிக் கொள்கிறார். இப்பொழுது அவர் மனப்பூர்வமாகவே அதைச் சொல்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எப்பொழுதுமே மனம் இருதயத்திற்கு அடிமை என்பதையும், மனிதனின் அடக்க முடியாத ஆசைகளுக்குப் பொருத்தமான தர்க்கவாதங்களைக் கண்டு பிடிக்க முடியும் என்பதையும் மனோதத்துவ சாஸ்திரிகள் அனைவரும் அறிவார்கள். ஒரு சிறு மாற்றம் போதும்—ஜவாஹர்லால் நிதானமாக நகரும் ஜனநாயக சம்பிரதாயங்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு சர்வாதிகாரியாகிவிடுவார்- அப்பொழுதும் அவர் ஜனநாய, சோஷலிஸ கோஷங்களை எழுப்பிக் கொண்டிருக்கக்கூடும்' பாஸிஸம் எங்ஙனம் இந்த பாஷையை உபயோகித்துக் கொழுத்து வளர்ந்தது என்பதும், கடைசியில் அதை வெறும் பயனற்ற குப்பை எனத் தூக்கி எறிந்தது என்பதும் நமக்குத் தெரியும்.

நம்பிக்கையிலோ அன்றி மனப்பாங்கிலோ நேரு பாஸிஸ்ட் அல்ல' கோரமான, ஆபாசமான பாஸீஸத்தை ஏற்க முடியாத அளவுக்கு அவர் பெரிய மனிதர். "தனி இடத்தில் காணும் பொது முகங்களைவிடப் பொது இடத்தில் காணும் தனி முகங்கள் மேன்மையாகவும், அழகாகவும் இருக்கின்றன". என்பதை அவருடைய குரலும் முகமுமே வெளியிடுகின்றன.

சர்வாதிகாரியின் முகம் பொது முகம். அது அந்தரங்கத்திலோ வெளியிலோ இன் முகமாக இருப்பதில்லை. ஜவாஹர்லாலின் முகமும் குரலும் நிச்சயமாக அந்தரங்கமானவை. ஒரு கூட்டத்தின் மத்தியில் இருந்தால்கூட அதைத் தவறாக நினைக்க முடியாது. தவிர பொதுக் கூட்டங்களில் அவர் பேசும்பொழுது அவர் குரல் ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட முறையில் பேசுவது போன்ற அந்தரங்க சுத்தியுடன் ஒலிக்கிறது. அவர் குரலைக் கேட்கும்பொழுதும் உணர்ச்சி மிகுந்த அந்த முகத்தைப் பார்க்கும்பொழுதும் அவற்றிற்குப் பின்னால் என்னென்ன எண்ணங்களும், ஆசைகளும் விசித்திரமான மனப் பாங்குகளும், மன அடக்கங்களும், அடக்குவதன் மூலம் சக்தியாக மாற்றப்படும் உணர்ச்சிகளும், அவரே ஒப்புக் கொள்ளத் துணியாத ஏக்கங்களும் மறைந்து கிடக்கின்றன. என்று யோசிக்கத் தோன்றுகிறது. பொதுக் கூட்டங்களில் பேசும்பொழுது சிந்தனைத் தொடர் அவரைத் தன் வசப்படுத்திக்கொள்கிறது. மற்ற நேரங்களில் அவர் பார்வையே அவரைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. அவருடைய மனம் எங்கோ விசித்திரமான உலகங்களிலும் கற்பனைகளிலும் அலைகிறது. ஒரு கணம் தம் பக்கத்திதல் இருப்பவர்களைக்கூட மறந்து கற்பனையில் சிருஷ்டித்த பிறவிகளுடன் மௌன சம்பாஷனை நடத்துகிறார் கரடுமுரடான தம் வாழ்க்கைப் பாதையில் அவர் ஏற்படுத்திகொள்ளத் தவறி விட்ட மனித உறவுகளைப் பற்றி அப்பொழுது சிந்திக்கிறாரா? அல்லது தம் எதிர்காலம் பற்றியும், போராட்டங்கள் பற்றியும் வெற்றிகள் பற்றியும் கனவு காண்கிறாரா? அவர் தேர்ந்தெடுத்துள்ள பாதையில் ஓய்வுக்கு இடமில்லை என்பதையும், வெற்றி கிடைத்தால்கூட அதனால் சுமைதான் அதிகரிக்குமென்பதையும் அவர் உணர்ந்திருக்க வேண்டும்' அராபியருக்கு லாரன்ஸ் கூறியது போல், "புரட்சிக்கு ஓய்விடம் கிடையாது; மகிழ்ச்சியும் பகிர்ந்து கொடுக்கப்படாது.

அவருக்கு மகிழ்ச்சி கிடைக்காமலிருக்கலாம். ஆனால் அதைவிடப் பெரியதான வாழ்க்கை லக்ஷியத்தின் ஈடேற்றம் கிடைக்கலாம்.

### சர்வாதிகாரியின் தன்மைகள்

ஜவாஹர்லால் ஒரு பாஸிஸ்டாக ஆக முடியாது. ஆனால் ஒரு சர்வாதிகாரியின் அம்சங்கள் அனைத்தும் - பொது மக்களின் பேராதரவு ஒரு குறிப்பிட்ட லக்ஷியத்தை அடைய வேண்டுமென்ற மன உறுதி, சக்தி, தற்பெருமை, ஸ்தாபனத் திறமை, ஆற்றல்,

கடினம், கூட்டத்தை விரும்பியபோதிலும் மற்றவர்களிடம் சகிப்புத்தன்மையில்லாமை, பலவீனத்தின் மீதும், திறமையின்மை மீதும் வெறுப்பு முதலிய எல்லாம் அவரிடம் உள்ளன. அவருடைய முன் கோபம் பிரசித்தமானது. அதை அவர் அடக்கிக் கொண்டால்கூட உதட்டின் வளைவின் மூலம் அது வெளியாகிவிடும். காரியத்தைச் செய்து முடிப்பதிலும் தமக்குப் பிடிக்காதவற்றை ஒதுக்கித் தள்ளிப் புதிதாக நிர்மாணிப்பதிலும் அவருக்குள்ள அடங்காத ஆவல், ஜனநாயகத்தின் நிதானப் போக்கை அதிக நாள் சகித்துக்கொண்டிராது ஜனநாயகத்தை அவர் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அது அவர் இஷ்டப்படி வளைந்துகொடுக்குமாறு செய்து விடுவார். சாதாரண காலத்தில் அவர் வெற்கரமான திறமையுள்ள ஒரு நிர்வாகியாக ஆனால் இந்தப் புரட்சி யுகத்தில் சீஸரிஸம் (சர்வாதிகாரம்) எப்பொழுதுமே தலைவாசலில் காத்துக்கொண்டிருக்கிறது. ஜவாஹர்லாலும் தம் ஒரு சீஸராக நினைத்துக்கொண்டுவிடுவது சாத்தியமில்லையா ?

ஜவாஹர்லாலுக்கும் இந்தியாவுக்கும் ஏற்படக்கூடிய அபாயம் அதுதான். சீஸரிஸத்தின் மூலம் இந்தியா சுதந்திரம் அடைய முடியாது. தயையும் திறமையும் பொருந்திய சர்வாதிகார ஆட்சியின் கீழ் இந்தியா சிறிது அபிவிருத்தி அடையமுடியுமென்றாலும், அதன் வளர்ச்சி தடைப்பட்டுவிடும். மக்களின் விடுதலையும் தாமதப்படும்.

## தனி நபரைப் போற்ற வேண்டாம்

ஜவாஹர்லால் சேர்ந்தாற்போல் இரண்டாண்டுகள் காங்கிரஸ் தலைவராக இருந்தாகிவிட்டது. சில விஷயங்களில் அவர் தம்மைத் தவிர்க்க முடியாதவராகச் செய்து கொண்டுவிட்டார், ஏற்கெனவே பலர் அவரை மூன்றாம் முறையும் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கூறுகின்றனர். ஆனால் நாட்டிற்கும் ஜவாஹர்லாலுக்கும் அதைவிட அதிகத் தீங்கு இழைக்கக்கூடிய காரியம் வேறு இருக்க முடியாது. அதன் மூலம் காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் புறக்கணித்து, ஒரு தனி நபரை உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்திவிடுவோம்; சீஸரிஸம் பற்றி மக்கள் நினைக்கும்படிச் செய்துவிடுவோம். ஜவாஹர்லாலிடம் உள்ள கெட்ட குணங்களுக்கு ஊக்கமளித்து, அவருடைய தற்பெருமையை அதிகப்படுத்தி விடுவோம். இந்தச் சுமையைத் தாங்கவும், இந்தியாவின் பிரச்னைகளைத் தீர்க்கவும் தம் ஒருவரால்தான் முடியும் என்று நினைத்துவிடுவார். வெளிப் பார்வைக்கு அவர் பதவி மோகம் இல்லாதவர் போல் தோன்றினாலும் சென்ற பதினேழு ஆண்டுகளாக அவர் காங்கிரசில் முக்கியமான பதவிகளைப் பிடித்துக்கொண்டு இருந்திருக்கிறார். என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர் தம்மை இன்றியமையாதவராகக் கருதுவார். யாருமே தம்மைப்பற்றி அப்படி நினைக்க இடந்தரக் கூடாது. சேர்ந்தாற்போல் மூன்றாவது வருஷமும் அவர் காங்கிரஸ் அக்கிராசனராக ஆகும்படி இந்தியா விடக்கூடாது.

இதற்கு அவரைப் பற்றித் தனிப்பட்ட முறையில் கூறவேண்டிய மற்றொரு காரணமும் உண்டு. அவர் ஜம்பமாகப் பேசினாலும் அவர் களைத்துப்போய், சுவையிழந்து விட்டார் என்பது வெளிப்படை. அவர் தொடர்ந்து தலைவராக இருந்தால் மேலும் சீரழிந்து விடுவார். அவரால் ஓய்வு கொள்ள முடியாது. ஏனென்றால் புலிபின்மேல் சவாரி செய்பவன் கீழே இறங்கினால் ஆபத்து ! ஆனால் அளவுக்கு மீறிய சுமையினாலும பொறுப்பினாலும் அவர் வழி தவறிச் செல்லாமலும், அறிவின் தரம் குறையாமலுமாவது நாம் பார்த்துக் கொள்ளலாம். எதிர்காலத்தில் அவர் நன்றாக வேலை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு.

[இந்தக் கட்டுரை நேருஜியாலேயே எழுதப்பட்டு, "மாடர்ன் ரெவ்யூ" பத்திரிகையில் வெளியாயிற்று, இதை எழுதியவர் யாரென்று தெரியாமலிருக்கும் பொருட்டு "சாணக்யா" என்ற புனைப்பெயருடன் நேருஜி இதை எழுதினார். திரு பி. டி தாண்டன் தொகுத்து, கல்கத்தா சிக்னெட் பிரெஸ் மூலம் வெளியிட்ட "நெஹ்ரு யுவர் நெய்பர்" என்ற நூலிலிருந்து இக் கட்டுரை இங்கு எடுத்து வெளியிடப்படுகிறது. நூலின் முதல் பதிப்பு 1946-ல் வெளியான போது அதன் விலை ரூ. 7-50.]

# அக்கம் பக்கம்

## நேருஜிக்குப் பிறகு யார் ?

நேருஜியின் அணுக்களும் கரைந்து போய் விட்டன: இந்த நாட்டின் காற்றோடு காற்றாய் நீரோடு நீராய், மண்ணோடு மண்ணாய் இரண்டறக் கலந்துவிட்டார். ஆவி பிரிந்து, பொன்னவிர் மேனி மறைந்து, மேனியின் சாம்பலும் கரைந்தபின் இன்று சூனியம் சுத்த சூனியமாக நிலைத்துவிட்டது.

நேருஜியின்ஜீவியம் பாரத நாட்டுச்சரித்திரத் திலேயே ஒளி மிகுந்த சகாப்தம். அவர் விடுதலைப் படையின் வீரத் தளபதியாக இருந்து 40 கோடி மக்களுக்கும் விடுதலை பெற்றுக் கொடுத்தார். செல்வச் சீமானாகப் பிறந்தும், நாட்டின் தரித்திர நாராயணர்கள் நிலையை உயர்த்தப்பாடுபட்டார். உலக நாடுகளிடையே இந்தியாவை முன்பு எப்போதும் கண்டிராத உயர்ந்த நிலைக்கு உயர்த்தினார். மக்கள் பால் மற்ற யாருமே செலுத்தியிராத அளவு அன்பைச் சொரிந்தார். மக்களின் அபரிமிதமான அன்பைப் பெற்று அவர்கள் நெஞ்சிலே குடி வாழ்ந்தார்.

இத்தகைய் உத்தமத் தலைவன்பால் மக்களின் நன்றி விசுவாசம் விம்மலாய், விசும்பலாய், கண்ணீர்ப் பெருக்காய், தளதளத்த குரலாய், சோகமாய், துக்கமாய், துக்கத்தின் உருவமாய் வடிவெடுத்திருக்கிறது,

நாட்டின் நன்மைகள் ஏராளம்இருக்கின்றன புன்மைகளும் இருக்கின்றன. புன்மைகளை எல்லாம் பொறுக்கும்படியும் மறக்கும்படியும் செய்த நேருவின் பொன்முகம் தான் இல்லை.

ஆனாலும் ஒரு ஆறுதல். இந்த தேச மக்கள் நேருவிடம் பெற்ற படிப்பு வீணாகிப் போய்விடவில்லை. காரிருளில் ஒரு ஒளிக்கீற்றைக் கண்டுவிட்டோம். தலைவர் காமராஜ் மூலமாக அந்தச் சின்னம் புலப்படுகிறது.

நேருவுக்குப் பின் யார் என்ற கேள்வி உலகம் பூராவிலும் சென்ற சில ஆண்டுகளாக எதிரொலித்து வந்தது. நேற்றுவரை கூட இந்த நிலை நீடித்ததாக உலகம் பூராவும் கருதியது. ஆனால் மவுனமாகத் தமது ஆற்றல்களை வளர்த்து வந்த ஒரு மாவீரன், நேருவுக்குப் பின் யார் என்ற புதிரை அழகாக விடுவித்து விட்டார்.

நேரு மறைந்துவிட்டாரே, இனி இந்தியாவின் வருங்காலம் எப்படி இருக்கும் என்று உலகில் பல நாடுகள் கவலைப்பட்டன. குறிப்பாக பிரிட்டன் அதிகமான கவலையையும் பயத்தையும் அக்கறையையும் காண்பித்தது. இந்த தேசத்தின் ஐக்கியம் சின்னாபின்னமாகச் சிதறுண்டு போகுமோ என்று கூட எழுதினார்கள். பிரிட்டிஷார், மற்ற யாரையும் விட, இந்தியாவின் பலவீனங்களை நன்றாக உணர்ந்தவர்கள். அந்தப் பலவீனத்தைகை முதலாக வைத்தே நாடாண்டவர்கள். அவர்கள் கவலைப்பட்டதை நாம் ஒரேயடியாக ஒதுக்கித் தள்ள முடியாது. செயல் மூலமாகத்தான் எல்லோருடைய கவலையையும் போக்கியாக வேண்டியிருந்தது. நேருவின் வாரிசைக் கண்டு பிடிப்பது மூலம் உலகத்தின் கவலைக்குத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு தமிழகத்தின் தவப்புதல்வர் பாரத ரத்தினம் காமராஜ் அவர்களை வந்து சார்ந்தது.

காமராஜ் எந்தத் துறையில் வல்லவரோ அந்த் வேலை அவரை வந்தடைந்தது. தமக்கு அனுபவப் பழக்கம் உள்ள துறையில் யாரும்

அவரை மிஞ்ச முடியாது. அவர் அதிகம் பேசுவதில்லை; ஆனால் பிறர் பேசுவதை மிக நன்றாகப் புரிந்து கொள்ளுவார். வாய்ப்பேச்சைக் கேட்கும் நேரத்தில் அவர்கள் இதயம் என்ன சொல்லுகிறது என்பதையும் புரிந்து கொள்ளுவார் காமராஜ். அவருக்கு அதிகமான மொழிகள் தெரியாது. ஆனால் இந்தியாவில் உள்ள எல்லாத் தரப்பாரும் எல்லா மொழியாரும், எல்லாத் தலைவர்களும் மனத்தில் என்ன வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் இரண்டொரு சொற்களைக் கொண்டே கண்டுபிடித்து விடுகிறார்.

இந்தியாவின் அடுத்த பிரதம மந்திரி யார் என்பதைக் கண்டறிந்து சொல்லும் பொறுப்பை ஏற்ற காமராஜ், நாடகம், சூடுமந்திரங்களுக்கு இடம் கொடுக்காமல் தெள்ளத் தெளிவான முறையில் யாருக்கும் புரியும்படியாகச் செயலில் இறங்கினார். நூற்றுக் கணக்கானவர்களுக்குப் பேட்டியளித்தார். முடிவில் லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்கே மகத்தான ஆதரவு இருக்கிறது என்பதைப் புலப்படுத்தி அவரை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வழி செய்தார்.

காமராஜ், அவர்களிடம் எல்லாம் என்ன பேசினார்? இவ்வளவு சிக்கல்களுக்கிடையே இப்பெரும் பிரச்சினையை இவ்வளவு சுமுகமாக எப்படி முடித்தார்? நேருவுக்கு அடுத்த ஸ்தானங்கள் வகித்த மொரார்ஜி தேசாய், ஜெகஜீவன்ராம் முதலியவர்களையெல்லாம் எப்படி எப்படி சமாளித்தார்? நேருவுக்கு அடுத்தபடி இந்த நாட்டின் மகத்தான தலைவன் என்ற நிலையை ஒரு சில நாட்களில் எப்படிப் பெற்று விட்டார் என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் இப்போதைக்கு முழுமையாகக் கிடைக்காது. காலம் செல்லச் செல்ல சிறுகச் சிறுகத்தான் கிடைக்கும்.

இந்திய நாட்டின் 560 குட்டி சமஸ்தானங்களையும் இணைத்த சர்தார் வல்லபாய் பட்டேலின் திறமை பற்றி இன்று கதை கதையாக எவ்வளவோ நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. காமராஜரின் சாதனையும் அப்படிப்பட்டதுதான். நாளைய சரித்திரத்தில் இந்த நிகழ்ச்சியும் தலை சிறந்த அரசியல் நிகழ்ச்சிகளாகவும் ராஜதந்திர சம்பவங்களாகவும் இடம்பெறும்.

காமராஜர் வெறும் கட்சித் தலைவர் மட்டுமல்லாமல் அவர் சிறந்த நிர்வாக நிபுணர் என்றும் மெய்ப்பித்தவர். தமிழ் நாட்டை ஈடு இணையற்ற முறையில் $9\frac{1}{2}$ ஆண்டுக் காலம் நிர்வகித்தவர். மற்றவர்களுக்கு இல்லாத திறமை இவருக்கு எப்படி அமைகிறது?

முதலாவது காமராஜருக்குத் தன்னலம் என்பது இல்லை. தன்னலத்திற்கு அவசியமான சூழ்நிலைக்கே இடமில்லை. பதவி ஆசை இல்லை. அதனால் எந்தப் பிரச்னையையும் அவர் தனக்காக அல்லாமல் நாட்டின் நலனைக் கருதிக் கண்ணோட்டமிட முடிகின்றது.

இரண்டாவது அவர் அற்ப விஷயங்களில் மனதைக் குடைந்து கொள்வது இல்லை. பிரச்னையின் அடிப்படையை மட்டும் கவனிப்பார். வீண் சிக்கல்களை வளர்த்துக் கொள்ள மாட்டார். எத்தனையோ பேர், எத்தனையோ சமயங்களில் அவரைத் தூக்கி விட்டுப் பார்த்திருக்கிறார்கள். அவர் தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக இருந்தபோது கல்விக்கொள்கை பல முக்கிய மாறுதல்களை அடைந்தது. திரு சி. சுப்பிரமணியம் கல்வி அமைச்சராக இருந்து பல சீர்திருத்தங்களைச் செய்தார். பல புதிய கொள்கைகளை மேற் கொண்டார். பின்னர் திரு. எம். பக்தவச்சலம் கல்வி அமைச்சரானதும், வேறு விதமான கல்விக் கொள்கைகளை வகுத்தார்.

முதலமைச்சராக காமராஜ் பதவி வகிக்கும் போதே தான் கல்விக் கொள்கையில் மாற்றங்களும் முரணான மாற்றங்களும் ஏற்பட்டன. "உங்கள் ஆட்சி தானே நடக்கிறது? ஏன் இந்தக் கொள்கை வேறுபாடு" என்று சிலர் கேட்டிருக்கிறார்கள்.

ஆனால் கல்வி விஷயத்தில் தலைவர் காமராஜ் அவர்களின் கொள்கையை அறவே அறிந்து கொள்ளாதவர்கள் அவர்கள். காமராஜரின் கல்விக் கொள்கை தெளிவானது. "ஏழைகள் எல்லாம் படிக்க வேண்டும், படித்தால்தான் முன்னேற முடியும் இதற்காக எல்லா ஊர்களிலும் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் ஏற்படட்டும் என்பதுதான் அவருடைய அடிப்படைக் கல்விக் கொள்கை.

மற்றபடி இந்திப் பாடத்திற்கு மார்க் போடுவது, இந்தியையும் ஒரு பாடமாக ஆக்குவது என்பன எல்லாம் சுண்டைக்காய்விஷயங்

கள். சின்னச் சமாச்சாரங்களை ஒதுக்கி விடுவது அவர் வழக்கம்.

நேருஜியும் இப்படித்தான் பெரிய விஷயங்களைப் பற்றியே சிந்திப்பாராம். ஒரு சமயம் அவரிடம் சில முக்கியஸ்தர்கள் சீனாவின் தொல்லை பற்றியும் பாகிஸ்தான் சிரமம் கொடுப்பது பற்றியும் கவலையோடு எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்களாம். அதற்கு நேருஜி நமது திட்டங்களும், சோஷலிச ஜனநாயக அமைப்பும் சரிவரச் செயல்பட்டால் போதும், இன்னும் பத்து ஆண்டுகளில் இந்தியா, உலகத்தின் தலைசிறந்த நாடுகளில் ஒன்றாக வளர்ச்சியுற்று வலிமை பெற்றுவிடும். அதற்குப் பின் இந்தப் பிரச்னைகள் தானாகத் தீர்வு கண்டு விடும் என்றாராம்.

எப்பேர்ப்பட்ட தலைவருக்கு எப்பேர்ப்பட்ட வாரிசு!

நேருஜிக்கு வாரிசாக விளங்கும் காமராஜர் தேசப் பிதா மகாத்மா காந்திஜிக்கும் அதே போல் வாரிசாகத் திகழ்கிறார். அதற்கு ஒரே ஒரு உதாரணம் காட்டலாம். இந்த நாட்டில் அஹிம்சையை முழு மனத்துடன் பின்பற்றுகின்ற ஒரே ஒரு ஆள் இருந்தாலும் போதும். நான் என் பணியில் வெற்றி பெற்று விடுவேன் என்று ஒரு சமயம் காந்தியடிகள் சொன்னதுண்டு. அதாவது உறுதிப் பாடாகக் கொள்கை வழி நிற்பவர் ஒரே ஒருவர் இருந்தாலும் போதும், நாடு நலமடையும் என்பது இதன் கருத்து.

தலைவர் காமராஜ் அந்தக் கருத்துக்கு சீரிய சான்றாக நிற்கிறார். காமராஜ் திட்டம் தோல்வி என்று பலர் சொல்லுகிறார்கள். பதவி இழந்த காங்கிரஸ் தலைவர்களே கூட நெஞ்சின் அடி ஆழத்தில் அத்திட்டம்பற்றி குரோதம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் காமராஜ் திட்டத்தின் கர்த்தாவான காமராஜ் மட்டும் மலை குலைந்தாலும் நிலை கலங்காமல் நிற்கிறார். ஆட்சிப் பதவியைக் கை விட்டு ஸ்தாபன வேலையை மனமார மேற்கொண்ட அவர், இன்று காங்கிரஸின் மிக உயர்ந்த பதவிக்கு உயர்ந்துவிட்டார். அவரால் இன்று காங்கிரஸ் பலம் தான் பெற்றது என்பதைக் குருடன் கூடக் கண்டு கொள்ள முடியும். ஆனால் மொரார்ஜி போன்றவர்கள் காங்கிரஸ் கட்சிப் பணியில் அவ்வளவாக ஆர்வம் காட்டக் காணோம். அதன் பலனாக இன்று அவர்களுக்குக் கட்சியிலும் செல்வாக்கு இல்லை. பதவியைப் பிடிக்கவும் பலம் போதவில்லை. உண்மையான உழைப்பாளி, உண்மையான கொள்கைவாதி வளர்கிறார், அவரால் ஸ்தாபனமே வளர்கிறது. நாடே மேல் நிலையை அடைகிறது.

பிரிட்டிஷாரும், அமெரிக்கரும்கூட இன்று காமராஜரின் சாதனைத் திறமையைக் கண்டு வியந்து, வாய் விட்டுப் பாராட்டுகிறார்கள். பாரதப் பிரதமர் ஆவதற்கு தகுதி உள்ளவர் என கூறுகிறார்கள் என்பதை நாட்டின் ஐக்கியத்தைக் கட்டிக் காப்பாற்றும் ஆற்றல் மிக்கவர் என்பதைக் காமராஜ் நிரூபித்துவிட்டார். காமராஜரைக் குறை கூற முற்பட்டவர்கள் யாரும் தங்கள் எழுத்தை அல்லது சொல்லை முற்றுப் புள்ளி வரை நீடிக்க முடியவில்லை.

காமராஜ் இன்று எதிர்ப்புக்கு மேற்பட்ட புருஷராகிவிட்டார். அவரை எதிர்ப்பதைவிட ஆதரித்தால்தான் லாபம் என்று புத்தியுள்ள எல்லோரும் உணர்ந்து கொண்டனர்.

காமராஜ் இன்று காங்கிரஸ் தலைவராக மட்டும் விளங்கவில்லை. பாரதத்தின் பாரம்பர்யப்படி, காந்தி, நேரு மரபுப்படி, நாட்டின் தலைவராக விளங்குகிறார். காங்கிரஸ்காரர்களை அவர் கண்டித்திருக்கும் விதமே அதற்குச் சான்றாகும்.

"காங்கிரஸ்காரர்கள் இத்தனை நாளும் செய்த தவறுகளை பொது மக்கள் பொறுத்துக் கொண்டார்கள். நேரு இருக்கிறார் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுவார் என்று மக்கள் அமைதி அடைந்தார்கள். ஆனால் காங்கிரஸ்வாதிகள் இனிமேல் தப்பு செய்தால் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்" என்று பார்லிமெண்டரி கட்சிக் கூட்டத்தில் சொன்னது சரியான எச்சரிக்கையாகும்.

நேருஜிக்குப் பின் யார் என்ற கேள்விக்கு நேருஜியாலேயே பரிகாரம் காண முடியாமல் இருந்தது. பிரச்சினையில் அவ்வளவு சங்கடம் பொதிந்திருந்தது. இன்று காமராஜ் அவர்கள் அநாயாசமாக, லாவகமாக அப்பிரச்சினையைச் சமாளித்து, உலகமே மலைக்கும்படிச் செய்துவிட்டார். இதன் மூலம் காமராஜரின் வேலை தீர்ந்து விடவில்லை. அவருடைய வேலை வளர்ந்திருக்கிறது. இனி அடுத்த படியாகக் காங்கிரஸின் வருங்காலம் என்ன என்ற கேள்வி

அவினை நோக்கி நகர்ந்து நகர்ந்து வருகிறது. நேருஜி இருந்த இடத்தில் வெறுமையை நோக்கி நிலைகுத்தி நிற்கும் கண்களின் விழிப் பார்வை மாறி, ஒரு பற்றிடத்தைக் கண்டு தான் ஆகவேண்டும். அந்தப் பற்றிடத்தில் மக்களின் அகக் கண்களுக்கு காட்சி அளிக்கும் ஒரே தலைவர் காமராஜ் ஆவார்.

காமராஜ் காங்கிரசைக் காப்பாற்றி விடுவாரா பழைய அந்தஸ்துக்கும் வலிமைக்கும் அதை உயர்த்தி விடுவாரா என்பது பற்றியெல்லாம் இன்று ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் திண்ணமாகக் கூறலாம் காங்கிரஸின் வலிமையை வளர்க்கவும் நாட்டின் ஒற்றுமையைக் காக்கவும் காமராஜரைக் காட்டிலும் சிறந்த தலைவர் வேறு கிடையாது. ஒற்றுமை வாதிகளும் தேசிய வாதிகளும் பாரத மக்கள் அனைவரும் இதை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டும். மக்கள் அனைவரும் இதை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். மக்கள் இதை உணர்ந்து நடந்து கொள்ளுவார்கள் என்பதிலும் ஐயமில்லை ஏனென்றால் இது தவிர வேறு வழி இல்லை.

நேருஜிக்கு நினைவுச் சின்னம் அமைப்பது பற்றி இன்று அநேகமாக அனைவருமே பேசுகிறார்கள். இந்த தேசமே அவருடைய தேசம் என்று சொல்லலாம். புதிய பாரத சமுதாயம் அவரால்உணர்வூட்டப்பட்டு, உருவாக்கப்பட்ட சமுதாயம் ஆகும். நேரு சகாப்தத்தில் நலம் பெற்ற மக்கள் அனைவரும் அவருடைய நினைவுச் சின்னங்களேயாவர். தவிர நினைவுச் சின்னம் வருங்கால சந்ததியாரின் அடையாளத்திற்காக அவசியம் என்று கொண்டாலும் நேருஜி அவரையும் அறியாமல் அவருக்காக ஏற்படுத்திக் கொண்டுள்ள நினைவுச் சின்னத்தைப்போல் சிறப்பானது பெருமை மிக்கது எதுவுமே இல்லை.

நேருஜியின் எழுத்துக்கள், இலக்கியங்கள் பேச்சுக்கள் அவருடைய ஒப்பற்ற நினைவுச் சின்னங்கள். செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பது போல, நேருஜி இறந்த பின் வெளி வந்திருக்கும் அவரது உயில், அவரது எழுத்து நினைவுச் சின்னங்களுக்கே மணிமுடியாக விளங்குகிறது.

நேருஜியின் அந்த உயில் ஒரு காவியமே ஆகும் இந்தத் தலைமுறையினருக்குக் கிடைத்த ஒப்பற்ற இலக்கியம். உணர்ச்சியின் கேணி அதை உணர்ந்துதான் அந்த உயிலை பள்ளிப் பாடப்புத்தகங்களில் பாடமாகச் சேர்ப்பது பற்றி எண்ணி வருகிறார்கள். அந்த உயிலில் நேரு நேருக்கு நேர் நின்று பேசுகிறார். முக்கியமாக இந்த தேசத்தின் அருமை பெருமைகளைச் சொல்லுகிறார். மக்களின் உள்ளத்தைத் தொடும் அன்பைக் கூறுகிறார். ஆனால் அதைச் சொல்லும் முறையிலேதான் ஒரு காவியம் இழையோடி வருகிறது. அழியாத அமர இலக்கியம் உருவெடுக்கிறது.

புதிய பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், காமராஜ் அவர்களைப போலவே தொண்டராக இருந்த உயர்ந்தவர். இவரைப் போலவே அவரும் பதவிகளைத் துச்சமாகத் தள்ளி எறிந்தவர். யூகம், மதி நுட்பம், ஏழைகள் பால் அன்பு, சமதர்மக் கொள்கை ஆகியவைகளில் காமராஜருக்கு ஜோடி எனச் சொல்லத் தக்கவர். நாட்டின் நிலைமைகளை குறிப்பாக தென்னாட்டின் நிலைமையை மற்ற எந்த வட இந்தியத் தலைவரை விடவும் நன்றாக அறிந்தவர்.


நேருஜியின் அபிமான சகாக்கள் காமராஜரும் லால்பகதூரும் ஆவர். அவருடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றவர்கள். நேருவின் பணி என்ற அதே பாதையில் அதே முறையில் நடக்க, காமராஜ் லால்பகதூர் ஆகிய இரு தலைவர்களுக்கும் தேசம் மனப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்கவேண்டும். இவர்கள் இருவரும் கட்சிக்கு மேற்பட்டவர்கள் என்பதை உணர்ந்து எல்லாக் கட்சியாரும் ஆதரவு தரவேண்டும்.

இந்த தேசம் வாழ வேண்டும்; தேசம் வாழ்ந்தால்தான் அரசியல், கட்சி என்பன எல்லாம் வாழ முடியும். தேசம் வாழ காமராஜ், லால்பகதூர் பணி செவ்வனே வளர வழி வகுப்போமாக!

நேரு நினைவு நம்மை வாழ்விப்பதாக!

# மேல் சபையில் கலைஞர்! எஸ். டி. சுந்தரம்

நந்தமிழ் நாட்டின் செந்தமிழ்க் கலைஞர் திரு. எஸ். டி. சுந்தரம் அவர்கள் மேல் சபை



அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதுவும் கலைஞானம் நிறைந்த முன்னாள் பிரதம நீதிபதி திரு. ராஜமன்னார் வகித்து வந்த இடத்தில் நம் கலைஞர் அமர்த்தப்பட்டிருப்பது உண்மையில் மிகப் பொருத்தமானதும் பெருமைக்குரியதும் ஆகும். கலைஞர் எஸ். டி. சுந்தரம் அவர்கள் சொல்லழகுக்காக பெயருக்கருகே கலைஞர் பட்டம் தரித்துக் கொண்டவரல்ல. அயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை முறையாகப் பயின்று அப்பயிற்சியின் தன்மையை தமது தரமான கவிதைகளால், கலைஞான கட்டுரைகளால், தமிழ் மணக்கும் நாடகங்களால் வெளிப்படுத்தியதின் மூலம் கலைஞர் என்ற அந்த ஒப்புயர்வில்லா அடைமொழி அவரைத் தானாகவந்தடைந்ததென்று சொன்னால் அது மிகையல்ல. அவர் வெறும் கலைஞர் மட்டுமல்ல! பாரத நாட்டின் அடிமை விலங்கொடித்த வீரத் தியாகிகளில் அவரும் ஒருவர். அவரது கனல்கக்கும் கவிதைப் பொறிகள், கட்டுரைத் துளிகள் அனைத்தும் உறங்கிக் கிடந்தன தமிழினத்தை தட்டி எழுப்பி வீராவேச விடுதலை வேட்கைகொள்ளச் செய்தது. கவிஞர், கட்டுரை ஆசிரியர், கதை எழுத்தாளர், நாடகாசிரியர், நடிகர் அரசியல் தியாகி சமூக ஊழியர், திரைப்பட இயக்குனர் போன்ற எத்தனையோ துறையில் இந்த குள்ளமான மனிதர் எவ்வளவு உயரமாக இருக்கிறார் என்று நினைக்கும் போது நமக்குக் கொஞ்சம் பொறாமை ஏற்படத்தான் செய்கிறது இல்லையா?

அமுதத் தமிழில் தேன் சொட்டும் அழகு நடையில் கவியின் கனவைத் தந்த இந்தக் கவிஞரின் கனவு பலித்துவிட்டதா என்ன? எப்போதோ வந்திருக்க வேண்டிய இந்த எம். எல். சி. பதவி இப்போது வந்தடைந்திருக்கிறது. அதனால் அவர் கனவு நினைவாகி விட்டதா? இல்லை. இல்லவே இல்லை! தேசிய கவிச் சக்கரவர்த்தி பாரதியாரை திரைப்படமாக்கி, தமிழகம் ஈன்றெடுத்த தலைவர் காமராஜரின் வாழ்க்கை குறிப்பை திரைப்படமாக்கி தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அளித்தால்தான் அவரது கனவு நனவாகும், கலைப்பசி அடங்கும்!

சுருங்கச் சொன்னால் எப்படியோ, எப்போதோ வரவேண்டிய மேல் சபை அங்கத்தினர் பதவி இப்போது அவரை வந்தடைந்து விட்டது. அதுவும் "இன்சால்வென்ட் குள்ள மாமா"க்கள் பலர் இடைவிடாது தடுத்தும்கூட வரவேண்டிய பதவி கலைஞர் சுந்தரத்துக்கு வந்துவிட்டது. இனி தமிழக மேல் சபையில் சங்கநாதம் கேட்கும்! சிங்கத் தமிழ்க் குரல் ஒலிக்கும்! தமிழ்க் கலை உலகம் சிரிக்கும்!

உண்மையே பேசி வந்த ஒரே காரணத்தினால் கெட்டுப்போன இந்தக் கலைஞர் இனியும் தொடர்ந்து உண்மையே பேசி (மேல் சபையில் மட்டும்) உயரட்டும் என்று அவரை தமிழ் கூறும் நல்லுலகத்தின் சார்பில் 'உதயம்' வாழ்த்துகிறது.

# 'ப்ரீ இந்தியா' கோவிந்தன்

இந்திய நாட்டில் அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் பத்திரிகை நடத்துவதென்பது



இமயமலையை பெயர்த்துவந்து அரபிக்கடலில் மிதக்கவிட்டு வேடிக்கை பார்ப்பதற்கு ஒப்பாகும் என்றால் அது மிகையல்ல. அதிலும் ஒரு ஆங்கிலப் பத்திரிகையை ஆங்கிலேயர்களின் அடக்குமுறை ஆட்சியின் போதே 'ப்ரீ இந்தியா' என்ற மகுடம் சூட்டி ஒருவர் 25 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கினாரென்றால் அவர் ஒரு சாதாரண மனிதராக இருக்க முடியாது. அசகாய சூரராகத்தான் இருக்க முடியும், அப்படித்தானே! அந்த அசகாய சூரர் வேறு யாருமல்ல அண்மையில் காலம் சென்ற திரு. ஈ ஆர். கோவிந்தன் என்பதை சொல்லியா தெரிய வேண்டும்? 'ப்ரீ இந்தியா' கோவிந்தன் அவர்கள் தமிழகத்தின் பத்திரிகைத்துறை ஜாம்பவான்களை உற்பத்தி செய்த சேலம் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் 'தமிழ் நாடு' பத்திரிகை ஸ்தாபனத்திலிருந்து உருவாக்கப்பட்டவர் என்றால் அவரது துணிச்சலுக்கு கேட்கவாவேண்டும்?

திரு. கோவிந்தன் அவர்கள் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் இனிய நண்பராக, பல பெரிய தமிழ் ஆங்கில எழுத்தாளரின் தோழராக, என் போன்ற பல இளைய எழுத்தாளர்களின் வழிகாட்டியாக, வாழ்ந்து மறைந்த ஒரு பெரியார். பத்திாகை ஆசிரியனாக இருந்து சமூகத்தின் பல்வேறு துறையைச்சார்ந்த மக்களையும் திருப்தி படுத்தி அவர்கள் அனைவரின் நண்பனாகவும் இருப்பதென்பது நடக்கக்கூடிய காரியமா என்ன? இந்த வினவுக்கு திரு. கோவிந்தன் அவர்களே ஒருவிடையாக விளங்கினார்! பெரிய மனிதன், விரிந்த உள்ளம், பரந்த மனப்பான்மை உடையவர் என்பதற்கு அவர் அமரத்துவம் அடைந்த மாதமே ஒரு சான்று. அந்த மாதத்தில்தான் ஆசியாவின் ஜோதியும், இந்திய மக்களின் உள்ளங்களிலே என்றும் குடியிருக்கும் நேருஜியும் மறைந்தார் என்றால் அது அவருக்குள்ள பெருமையைக் காட்டுகிறதல்லவா?


## உதயம்

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| அட்டை கடைசிப் பக்கம் | ரூ. 200 |
| அட்டை உள்பக்கம் | ரூ. 175 |
| சாதாரண உள்பக்கம் | ரூ. 150 |
| „ அரைப் பக்கம் | ரூ. 75 |
| „ கால் பக்கம் | ரூ. 40 |

★

விளம்பர விவரங்களுக்கு எழுதவும்:

"உதயம்"

27, ராஜகோபால் நாயக்கன் தெரு,

சென்னை-2.

தொலைபேசி: 84103 & 22022



# பஞ்சாமிர்தம்

1935-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் இரண்டாம்தேதி. பாசிஸ்ட் 'டூமுனி' முசோலினியின் கொலை வெறி ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம். அந்த கொடுங்கோலனின் கொட்டம் உச்சக்கட்டம் அடைந்திருந்த நேரம்-

மாலை நேரத்தில் மார்சேல்ஸிலிருந்து ஒரு விமானம் வந்து சேர்ந்தது. அதிலிருந்து பண்டித ஜவாஹர்லால் நேரு இறங்கினர். உடனே ஒரு உயர்தர இத்தாலிய அதிகாரி அவருக்குப் பெரிதாக ஒரு ராணுவ 'சலுட்' அடித்தான்.

"தாங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று மரியாதையோடு கேட்டார் பண்டிட்ஜி

"இத்தாலிய மந்திரி சபையிலிருந்து நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். தங்களை முசோலினி காண விரும்புகிறார். இன்று மாலை ஆறு மணிக்கு இச்சந்திப்பு நடக்கவேண்டுமென்று நேரம் குறித்தாகிவிட்டது. இதோ தங்களுக்கு அழைப்புக் கடிதம்" என்றான் அந்த ராணுவ அதிகாரி.

கடிதத்தை ஜவாகரிடம் பணிவன்போடு கொடுத்துவிட்டு அவரை ஆவலோடு பார்த்தான் அந்த அதிகாரி. ஜவாகருக்கு மனதிலே ஒரே போராட்டம். அப்பாவியான மக்களை அடிமைப்படுத்தி அக்கிரம ஆட்சி நடத்தும் அந்த ஆக்கிரமிப்பாளனைப் பார்ப்பதா? அபிசீனியா மீது நச்சுக் குண்டுகளை வீசி நாசப்படுத்தும் அந்த நாசக்காரனைப் பார்ப்பதா? இவ்விதம் மனம் குழம்பிக் கொண்டிருந்தார்.

அந்த வேளையில் அதிகாரி மீண்டும் பேசினான்.

"எவ்வளவோ முக்கிய வேலைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு, முசோலினி தங்களுக்காக காத்திருக்கிறார். தங்களோடு கை குலுக்கினால் போதும். அவ்வளவுதான் அவருடைய ஆசை ஆகவே அவசியம் என்னோடு வாருங்கள்" என்று அந்த அதிகாரி கெஞ்சினன்.

ஜவாகருக்கு ஒரே தர்ம சங்கடமாகிவிட்டது.

இப்போது அவர் இருப்பதோ இத்தாலிய மண்ணில், ரோம் நகரில்! அழைப்பு விடுத்திருப்பவனோ அகிலமே கண்டு நடுங்கும் சர்வாதிகாரி முசோலினி, சந்திக்க முடியாது என்று மறுத்தால், விபரீத விளைவுகள் ஏற்படலாம். இவற்றை எல்லாம் நேருஜி யோசித்தார்.

ஆனால் இதற்காக இரக்கமற்ற அரக்கனின் களங்கம் நிறைந்த கரங்களைக் குலுக்குவதா? என்ன நேரிடினும் சரி, உயிரே அழிவதானாலும் சரி, இந்த இழி செயலைச் செய்வதில்லை என்று உறுதி கொண்டார்.

முசோலினியை சந்திப்பது சாத்தியமில்லை என்று அழுத்தமாகக் கூறிவிட்டார். இத்தாலிய எல்லைக்குள் இதுவரை முசோலினியின் விருப்பத்துக்கு மாறாக நடக்கும் துணிச்சல் யாருக்கும் இருந்தது கிடையாது; ஆகவே அந்த, வந்த அதிகாரி இந்தப் பதிலைக் கேட்டு பேச்சு மூச்சற்று திகைத்துப் போய் நின்று விட்டான.

∴ ∴ ∴

'குறட்டை' விட்டு மிக அமைதியாகவும் சுகமாகவும் 'நெடுந்துயில்' செய்வதில் கும்பகர்ணனையும் மிஞ்சுகிற ஒருவர் தமிழகத்திலும் இருக்கிறார் என்று சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். அனுபவித்தது, லயித்தது தூங்குவதைப் போலவே, பல நாட்கள் தூங்காமலே விழித்திருந்து கருமமே கண்ணாயிருப்பதிலும் இந்தத் தமிழர் அசகாய சூரர்!

பல ஆண்டுகளுக்கு முன்பு, சுதந்திரப் போராட்ட காலத்தின் போது ஒருமுறை பண்டித ஜவாகர்லால்நேரு அவர்கள் சென்னை வந்திருந்த போது திரு. சத்தியமூர்த்தியின் விருந்தினராய் இருந்தார். சத்தியமூர்த்தியின் வலக்கரமாக விளங்கிய ஒரு கரிய நெடிய உருவம் உடைய ஒருவரும் சத்தியமூர்த்தியின் இல்லத்தில் நேருஜியைக் கண்டு பதுங்கி ஒதுங்கி நடந்து கொண்டிருந்தார். இரவு நெடு நேரத்திற்குப் பிறகு நேருஜி அவர்கள் தூங்கச் சென்றார். "உா—உர்ர்" என்ற கர்ண கடூரமான குறட்டை ஒலி ஒன்று அவரது தூக்கத்தை கலைத்துக் கொண்டிருந்ததாம்.

உடனே நேருஜி அறைக்கு வெளியே வந்து "யார்இந்த குறட்டைப்பேர்வழிகும்பகர்ணன்? அவரைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்" என்று கத்தினாராம். இந்த குறட்டைப் பேர் வழி வேறு யாருமல்ல சத்தியமூர்த்தியின் வலக்கரமாக விளங்கிய அந்தக் கரிய நெடிய உருவம்தான். அவர் தன் இன்று இந்தியா வின் தலைவிதியை நிர்ணயிக்கும் தன்னிகரற்ற தனிப்பெரும் தலைவர் திரு. காமராஜ். அன்று குறட்டைவிட்டு நேருஜியின் கோபத்துக்கு ஆளான திரு. காமராஜ் அவர்கள் இன்றும் 'குறட்டையை' விட்டதில்லை.

நேருஜியின் மறைவுக்குப் பிறகு இந்தியா வின் தலை விதியை நிர்ணயிக்கும் நேருஜியின் வாரிசை உருவாக்குவதில் 'பசி நோக்காது கண் துஞ்சாது அயராது உழைத்து லால் பகதூர் அவர்களை உலகம் முழுதும் வியக்கும் வண்ணம், பாரத நாட்டின் பிரதமராக்கிய அன்றே தலைவர் காமராஜ் அவர்கள் குறட் டையை துணைக்கழைத்துக் கொண்டு பலமணி நேரம் அயர்ந்து தூங்கினாராம். வாழ்க அவரது குறட்டை!

ஃ ஃ ஃ

காஷ்மீர் மந்திரி சபைக் குழப்பத்தை தீர்த்து வைப்பதற்காக நேருஜி அவர்கள் லால்பகதூர் சாஸ்திரியை சில மாதங்களுக்கு முன்பு காஷ்மீருக்கு அனுப்பியது நினைவு இருக்கலாம். அப்போது நடுங்கும் குளிர் காலம். லால்பகதூர் அவர்களிடம் குளிர் தாங்கும் மேலங்கி (Over coat) இல்லை. அவர் நேருஜியிடம் இரவலாக அதை வாங்கிச் சென்று வந்தார். திரும்பி வந்ததும் நேருஜி அவர்களை சந்தித்தபோது அவருடன் மகாவீர் தியாகியும் இருந்தார்.

"அன்புள்ள லால்பகதூர், ஓவர் கோட் உங்களுக்கு பயன்பட்டதா? என்று நேருஜி கேட்டார்.

"பண்டிட்ஜி, அந்த கோட்டு உங்கள் உள்ளத்தைப் போன்று மிகப் பெரிதுதான், எனக்கு அது மிகவும் பாதுகாப்பாகஇருந்தது, பயன்பட்டது என்று பணிவுடன் பதிலுரைத் தார் லால்பகதூர்.

"அந்த ஓவர் கோட்டை நேருஜிக்கு திருப் பித் தராதீர்கள். அதற்குள்ளேயே பாது காப்பாக இருங்கள்" என்று அவர்களுட னிருந்த தியாகி அவர்கள் சொன்னதும் எல் லோரும் வாய்விட்டுச் சிரித்துவிட்டார்கள்.

இன்று லால்பகதூர் சாஸ்திரி அவர்களிடம் நேருவின் சின்னமாக அந்தக் கோட்டு ஒன்று இருக்கிறது. அந்த 'ஓவர் கோட்' நேருஜி யுடன் சென்று பலநாடுகளைக் கண்டிருக்கிறது. பல மாநாடுகளைக கண்டிருக்கிறது, பல தேச தலைவர்களைக் கண்டிருக்கிறது.

இதுவரை வெளி நாடே சென்றிராத பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி வெளி விவகார அமைச்சர் பொறுப்பையும் வகிப்பதால், அவர் வெளி நாடு சென்றே ஆகவேண்டும். அவருடன் கூடவே அந்த 'ஓவர் கோட்டை' யும் கொண்டு சென்றால் அது அவருக்கு ஒரு பெரும் துணையாகவும், பெருமையாகவும் இருக்குமல்லவா?

ஃ ஃ ஃ

காமராஜ் திட்டத்தால் மத்திய அமைச்ச ரவையிலிருந்து வெளி வந்த லால்பகதூர் சாஸ்திரியார் புவனேஸ்வரத்தில் நேருஜிக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவைத் தொடாந்து அவருக்கு ஒத்தாசையாக இருக்கும் பொருட்டு மீண்டும் இலாக்கா இல்லாத மந்திரி யாக நியமிக்கப்பட்டார். அப்போது ஒரு நாள் பேச்சு வாக்கில் லால்பகதூர் சாஸ்திரி நேருஜியிடம் "எனக்கு ஒரு இலாக்காவும் இல்லையே, நான் என்ன வேலை செய்வது?" என்று கேட்டாராம். அதற்கு சட்டென்று நேருஜி "என் வேலைகளைக்கவனியுங்கள்" என்று பதிலளித்தாராம். நகைச் சுவையாகத்தான் நேருஜி சொன்னார். ஆனால் அது இன்று நடைமுறை உண்மையாக பலிததுவிட்டது.

தீர்க்க தரிசிகளின் நாவிலிருந்து வேடிக் கையாகவும் விளையாட்டாகவும் வெளிவரும் வார்த்தைகள் கூட பலித்துவிடும் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

# அமரர் நேருவின் அமர காவியம்!

இந்த புண்ணிய பாரத பூமியில் எத்தனையோ பொன்னொளிர் மேனியர் தோன்றியும் மறைந்தும் வந்திருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் வைரம் பதித்த சிகரமாகத் திகழ்ந்திருக்கிறார் நம் உலகப் பேரொளி அமரர் நேருஜி. அவர் தன்னைப் பெற்றெடுத்த இந்தியத் தாயை, பிறந்த பொன்னாட்டை எப்படி நேசிக்கிறார் என்பதற்கு 'உயில்' என்ற பெயரிலே அவரது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட இந்த அமர காவியமே சான்று. அழியாப் புகழ் பெற்ற நேருஜியின் திருநாமம் உள்ளளவும் இந்த அமர காவியம் இந்திய மண்ணில் என்றும் திலைத்து நிற்கும். இந்த அமர காவியத்தின் சில பகுதிகளை கீழே படியுங்கள். —ஆசிரியர்.

"எனது அஸ்தியில் ஒரு பிடியை கங்கையில் கரையுங்கள். மீதமுள்ள அஸ்தியை விமானத்தின் மூலம் வயல்களில் தூவுங்கள் இந்தியாவின் மண்ணிலும் தூசியிலும் என் அஸ்தி கலந்து கரைந்து இந்தியாவுடன் ஒன்றிக் கலந்துவிட்ட பகுதியாக ஆகட்டும்."

ஆசியாவின் ஜோதி, மனிதருள் மாணிக்கம் ஜவஹாலால் நேரு தமது உயிலில் தெரிவித்துள்ள விருப்பம இது.

## மக்களுக்கு என் கைம்மாறு

நேருஜி தமது உயிலில் மேலும் கூறியிருப்பதாவது:—

பாரத மக்கள் என்மீது அளவு கடந்து அன்பும் அபிமானமும் காட்டியுள்ளனர். இதற்கு பதிலாக நான் எவ்வளவுதான் அன்பு காட்டினாலும் அதற்கு கொஞ்சம்கூட ஈடாகாத அன்பைப்போன்ற ஒரு விலைமதிக்கமுடியாத பொருளைத் திரும்பத்தரவே முடியாது. இந்திய மக்கள் பலரைப் பாராட்டியிருககிறார்கள். பலரைப் போற்றி வணங்கியிருக்கிறார்கள். ஆனால், எல்லா வகுப்புகளையும் சேர்ந்த இந்திய மக்கள் என்மீது அன்பைச் சொரிந்துள்ளனர். இதற்கு அளவே கிடையாது. இதைக் கண்டு நான் பரவசமடைந்துள்ளேன். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்வது? என் வாழ்நாளின் எஞ்சிய பகுதியில் மக்கள் என்மீது காட்டிய அன்புக்கு தகுதியற்றவனாக நடந்துகொள்ள மட்டேன்.

கணக்கற்ற எனது தோழர்களுக்கும். சகாக்களுக்கும் இன்னும் அதிகமான நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

**நான் மரணமடைந்த** பிறகு எனக்கு சிராத்தம் போன்ற மதச் சடங்குகள் எதுவும் நடத்தப்படுவதை நான் கொஞ்சம்கூட விரும்பவில்லை என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது போன்ற சடங்குகள் நடத்துவதிலும் இதற்கு உட்படுவதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. வெறும் சடங்கு நடத்துவதுகூட வஞ்சனையாகும். நம்மை ஏமாற்றிக் கொள்வதாகும், பிறரையும் ஏமாற்றுவதாகும்.

## அஸ்தியை எங்கும் தூவுங்கள்!

எனது உடலை தகனம் செய்யவேண்டும், வெளிநாட்டில் நான் மரண மடைந்தால் வெளிநாட்டிலேயே என்னை தகனம் செய்து எனது அஸ்தியை அலகாபாதுக்குஅனுப்பவேண்டும். ஒருபிடி சாம்பலை கங்கையில் கரைக்கவேண்டும். அஸ்தியின் பெரும் பகுதியை நான் கீழே குறிப்பிட்டுள்ளபடி செய்யவும். துளி அஸ்தியைக்கூட மிச்சம் வைத்துக் கொள்ளவோ பாதுகாத்து வைக்கவோ கூடாது.

அலகாபாத்தில் கங்கை நதியில் எனது அஸ்தியில் ஒரு பிடி கரைக்கப்பட வேண்டும் என்ற ஆசைக்கு எந்த வித மத சாஸ்திர முக்கியத்துவமும் கிடையாது. என்னைப் பொறுத்த வரை இதில் எனக்கு மதாபிமானமே இல்லை; சிறு வயதிலிருந்தே நான் அலகாபாத்திலுள்ள கங்கை—யமுனை நதி தீரத்தில் பிடிப்புக் கொண்டிருந்தேன். நான் வளரத் தொடங்கியதும் இந்த பிடிப்பும் ஆவலும் வளரத் தொடங்கின.

## கங்கை, யமுனை என் ஜீவநாடி!

பருவம் மாறும் போது இந்த நதிகள் தன்மை மாறுவதையும் நான் கவனித்திருக்கிறேன், அப்போது நான் இந்த நதிகள் பற்றியும் அவைகளில் ஓடும் வெள்ளம் பற்றியும் பன்னெடுங்காலமாக கதைகள் மூலமாகவும் பாடல்கள் மூலமாகவும் பரம்பரை பரம்பரையான வரலாற்றிலும் புராணங்களிலும் சொல்லபபட்டிருப்பதை நினைவு கொள்வேன்.

இந்திய மக்களால் நேசிக்கப்படும் கங்கா நதியின் ஊடே இந்நாட்டின் பல்வேறு இனங்களைப் பற்றிய அவள் (கங்கை) நினைவுகள் அவளது அச்சங்கள், நம்பிக்கைகள், அவளது வெற்றிப் பாக்கள் அவளது தோல்விகள் வெற்றிகள் யாவும் பின்னிக் கிடக்கின்றன. இந்தியாவின் நெடுங்கால கலாசாரம் நாகரிகம் இவற்றின் சின்னம் அவள். எப்போதும் மாறிக்கொண்டே எப்போதும் ஓடிக்கொண்டே இருந்தாலும் அவள் எப்போதுமே கங்காதான்.

### பசுமை, பண்பின் சின்னம்!

அவள் (கங்கை) இமாலயத்தின் பனி மூடிய சிகரங்களையும் ஆழ்ந்த பள்ளத்தாக்குகளையும் பற்றிய சிந்தனைகளைக் கிளப்பிவிடுகிறாள். நான் அவைகளையும், அவைகளுக்குக் கீழே உள்ள செழுமையான சம வெளிகளையும் நிரம்பவும் நேசிக்கிறேன். அங்கேதான் என்னுடைய வாழ்க்கையும் பணிகளும் நிறைவேறின.

காலை வேளையில் இள நகை பூத்து இன்ப மூட்டும் நடனமாடிக் கொண்டும் மாலை நேரம் நிழல் படரும் போது மங்கிய இருளில் முழுமோன மர்மமாகவும் குளிர் காலத்தில் குறுகிய ஓடை போல மெதுவாகவும் மென்மையுடனும் பருவ காலத்தில் பேருருவங் கொண்டு பேரிரைச்சலோடு உறுமி பெருங் கடல் போல அழிக்கும் ஆற்றல் பெற்றவள் போலவும் விளங்கும் கங்கை எனக்கு இந்தியாவின் பழைமையை நினைவு கூர்ந்து, நிகழ் காலத்தில் வந்து, ஆழிபோன்ற எதிர் காலத்தில் சங்கமமாகின்றவளாகவே தோன்றுகிறாள்.

### பழைய தளைகள் அறுபட வேண்டும்!

பழைய மரபில் வந்த சில பழக்க வழக்கங்களை நான் கைவிட்டேன் எனினும் இந்தியா தன்னைப் பிணைத்துள்ள கட்டுப்படுத்தியுள்ள எல்லா தளைகளையும், தனது மக்களைப்பிரித்து வைத்து அவர்களில் பலரை அடக்கி வைத்து அவர்களது சுதந்திர உடல் உள்ள வளர்ச்சியைத் தடை செய்துள்ள தளைகளையும் தகர்த்தெறிய வேண்டும் என்பதே எனது ஆசை. நான் இவ்வாறெல்லாம் கூறினாலும் பழைய மரபுகளுலிருந்து முழுவதுமாக அறுபட்டு மாறிவிட நான் விரும்பவில்லை.

### மாபெரும் மரபில் நானும் ஒருவன்!

நினைவு கொள்ள முடியாத நாட்களிலிருந்து அறுபடாத சங்கிலிபோல இணைப்புப் பாலமாக இருந்து வந்துள்ள மாபெரும் மரபு நம்முடையது. வரலாறு தொடக்கத்திலிருந்து வரும் அந்த மரபில் நானும் வந்தவன் என்று அறியும் போது பெருமிதம் கொள்கிறேன்.

அந்த சங்கிலித் தொடரை நான் அறுக்க மாட்டேன். அதை நான் கருவூலமெனக் காத்து அதிலிருந்து ஊக்க உணர்வு பெறுகிறேன்.

என்னுடைய இந்த ஆவலை வெளிப்படுத்துவதாகவும், இந்தியாவின் கலாச்சார மரபுக்கு எனது இறுதி மரியாதையாகத்தான் எனது அஸ்தியில் ஒரு பிடி அலகாபாதிலுள்ள கங்கை நதி தீரத்தில் கரைக்கப்பட்டு இந்திய கரையில் மோதும் சமுத்திரத்தில் கலக்க வேண்டுமென வேண்டுகிறேன்.


## உதயம் சந்தா விபரம்

சிறப்பு மலர்கள் உள்பட 'உதயம்' ஓராண்டு சந்தா ரூபாய் ஐந்து. 'உதயம்' உங்கள் இல்லம் தேடிவர இன்றே ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

விபரங்களுக்கு
நிர்வாகி, "உதயம்"
சென்னை-2



# அனிச்சப்பூ

## 13

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே

— திருமந்திரம்

எழில்முதல்வன்

தேர்வு முடிந்த மறுநாளே இளங்கோவின் கிராமத்திற்குச் செல்ல வேண்டும் என்று நந்தன் முடிவு கட்டி இருந்தாலும் பல்வேறு காரணங்களால் அது முடியாமல் போய் விட்டது. காந்தி நகரை அடுத்துச் சிறிய மலர் உயர் நிலைப் பள்ளிக்குப் பக்கத்தில் இருந்த சகதி நிலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த குடிசைவாழ் மக்களை அந்த நிலத்தின் உரிமையாளர் வேறு எதோ காரணம் கருதி வெளியேற்ற முற்பட்டதையும் நீண்ட காலமாக அந்தப் பகுதியில் வாழ்ந்துக் கொண்டிருந்த மக்கள் செல்லும் இடம் அறியாமல் நிர்க்கதியாய் நின்று கொண்டிருந்த நிலையையும் நந்தன் அறிந்த போது அதற்கு ஒரு பரிகாரம் தேடியே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். அரண்மனைத் தோட்டத்திற்குச் சென்றுவிட்டு அந்த வழியாக நடந்து வந்து கொண்டிருந்த போது, அந்தக் குப்பத்து மக்களை யாரோ ஒரு முரடன் அடித்துத் துன்புறுத்தி வீட்டை விட்டு வெளியேறுங்கள் என மிரட்டிக் கொண்டிருந்ததை அவன் தன் கண்ணாலேயே கண்டான். பக்கத்துக் குடிசை மக்களைக் கூப்பிட்டு விசாரித்த போது அந்த முரடன் நில உரிமையாளரின் 'ஏஜண்ட்' என்றும், 'எஸ்டேட் மானேஜர்' என்ற பெயருடைய அந்த மனிதமிருகம் அவர்களுக்குக் கொடுத்து வரும் இன்னல்கள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது என்றும் அறிந்து கொண்டான்.

நில உரிமையாளர் தனக்குச் சொந்தமான அந்த இடத்தில் பங்களா ஒன்று கட்டுவதற்காகவே மக்களை மிரட்டி வெளியேற்றிக் கொண்டிருந்தார். முதலாளியின் மிரட்டலுக்கு அஞ்சிய சில குடும்பங்கள் நடைப்பாதை ஓரங்களிலும், மரத்து நிழலிலும் அடைக்கலம் புகுந்திருந்தன. வயதான பெரியவர்கள் தங்களது மூட்டை முடிச்சுக்களையும், சட்டிப் பானைகளையும் எங்கே வைப்பது எனத் தெரியாமல் மரத்தடியில் எல்லாவற்றையும் குவித்து வைத்திருந்தனர். அடுக்கி வைக்கப்பட்டிருந்த தாழம்பாய்களே குறுக்குச் சுவர்களாகவும் அவர்கள் வீடு அமைந்திருந்தது. ஆடையோ அரைவயிற்றுக் கஞ்சியோ இல்லாத அக்குடும்பத்துப் பிள்ளைகள் பிறந்த மேனியாகப் பரிதாபகரமான நிலையில் புழுதியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த அவலக் காட்சியைக்

கண்டு நந்தன் துணுக்குற்றான். புதியதாக மணம் முடித்துக் கொண்ட இருவர் மரத்து நிழலிலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். நெற்றியில் காலணா அளவில் வட்டவடிவமான குங்குமப் பொட்டும், இடுப்பில் கட்டம் போட்ட சிட்டிச் சேலையும் அவள்பால் காணப்பட்டன. கழுத்தில் தடித்த மஞ்சள் கயிறு வெளியே தெரியும்படியாகக் காட்சியளித்தது. புது மோகம் மாறாத அந்தத் தம்பதிகள வழியிலே வருவோர் போவோரை மறந்து குழுமபு விளையாட்டில் ஈடுபட்டிருந்ததை நந்தன் கண்ட போது ஏதோ ஒரு விதமான அருவருப்பும், பிறகு அவர்கள் வேறு எங்கேததான போவர்கள என்ற சமாதானமும் அவனுள்ளே எழுந்ததைக் கண்டான். ஏழைகளின தாம்பதய வாழ்க்கைக்கு ஏழடுக்கு மாளிகைத்தான் தேவை என்றால அவர்கள என்றும பிரமமச்சாரிகளாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான.

சாலை ஓரத்தில் புளிய மரத்து வேரில் தன் கூனல் முதுகைச் சாய்த்துக் கொண்டே முறததில் நெல்லைக் கொட்டி புடைததுக் கொண்டிருந்த ஒரு கிழவியைப் பார்ததபோது அவள நெல்லிலே உள்ள கல்லைப் பொறுக்குகிறாளா அல்லது கல்லிடையே கிடக்கும நெல்லைப் பொறுக்கிச் சேர்க்கிறாளா என்ற ஐயம் எழுந்தது. பெரும் பெருமபணககாரா கட்கெல்லாம் உணவோடு சிறு சிறு கற்கள் சேர்ந்து விட்டால் அறுவை மருததுவம் செய்ய வேண்டிய நிலைககு ஆளாகி விடுகிறார்களே. இந்த அப்பாவி மககள கல்லோடும் மண்ணோடும அரிசியைக் கலந்து சாபபிடுகிறார்களே, இவர்களுக்கெல்லாம இது போல வியாதி ஒன்றும வருவதிலலையே, இது கூட இயறகை ஏழைகளுககுச் செயயும தற்பாதுகாபபுதானோ — என்று நந்தன எண்ணலானான.

இடுப்பிலே தூங்கியும், முகத்தில் நீண்ட கிருதாவும், முரட்டு மீசையும கொண்டிருந்த எஸ்டேட் மானேஜர் ஒரு கிழவனை நோக்கி ''மரியாதையா, இன்னும ரெண்டு நாளைக்குள்ளே வேறெ இடம் பார்த்துகிட்டுக் கிளம்பாட்டா குடிசையையே இல்லாமப் பண்ணிப்பிடுவேன்.... நெனப்பு வெச்சுக்கோ'' என்று கூறி விட்டு கைத்தடியை ஓங்கிக் காட்டினான் தன் பலத்த முஷ்டி உருண்டு திரள, நெற்றி நரம்புகள் விம்மிப் புடைக்க புலிபோல உறுமிவிட்டு அவன் தடியைக் கீழே போடுகிற வரை எதிரே நின்ற கிழவன் சொல் குழற, நின்று நடுங்கி, மனச்சாந்தி அடையாதவனாக இருந்தான்.

ஒருவன் பங்களா கட்டிக்கொண்டுவாழ இத்தனை மக்கள் வெளியேற வேண்டுமா? தன்னுடைய சுகவாழ்வைப் பிறருடைய துன்பத்தின் அடிப்படையில் அமைத்துக் கொள்வது எவ்வளவு பெரிய பாவம்? இதற்கு இந்த சமுதாயததில் முடிவே கிடையாதா? என்றெல்லாம் எண்ணினான.

நடுத்தர வயதுடைய ஒரு மாது ஓயாமல் அழுது கொண்டிருக்கும் தன் குழந்தையைச் சமாதானப் படுதத முயல்வதையும், மெலிந்து எலும்புக் கூடாக இருந்த அந்தக் குழந்தைத் தாயின் வரண்ட மாரபைச் சுவைததுப் பால் கிடைக்காமல் தன் கையையும், காலையும் உதைததுக் கொண்டு "வீல" "வீல்" எனத் தொண்டை கிழியக் கத்துவதையும், ஆத்திரம் தாங்காத அந்தத் தாய குழந்தையை அடிதது நொறுக்கி "நீ ஒரேயடியாய்ச் தொலைஞ்சிட்டாலும கவலை இல்லாமெ இருப்பெனே, ஏன் இப்படி என் உசிரை எடுக்கிறே, செததுத் தான தொலையேன'' என்று சபிததுக்கொட்டுவதையும அமைதியாக நெடுநேரம நந்தனால் நின்று பார்ததுக் கொண்டு இருக்க முடியவில்லை. அந்த மாதை அழைத்து "ஏம்மா! நீயும ஒரு தாயதானே.... இப்படியா குழந்தையை அடிக்கிறது... சிறுசுக்கு என்ன தெரியும....'' என்று கண்டிதது விட்டுச் சில சில்லறைக் காசுகளையும அவளபால் கொடுத்து விட்டு அப்பால் நகர்ந்தான. செல்லும வழி நெடுகத தான சேரியில் பார்த்த சிசுவைப் பற்றியே சிந்திக்கத் தொடங்கினான். நாளைக்கு இந்த நாட்டை ஆள வேண்டிய குழந்தைகள இப்படியே வறுமையில வளர்ந்தால இந்தக் குழந்தைகளின எதிர்கால நிலை என்ன? இந்தக் குழந்தைகளால உருவாகப் போகும் எதிர்காலச் சந்ததியின கதி என்ன? இப்படிப்பட்ட பரமபரையையே தன்னுள கொண்டிருக்கும எதிர்கால நாட்டின் நிலை என்ன? 'குழந்தைகளை என்னிடத்தில் வர விடுங்கள்; பரலோக அரசு அவர்களுடையது' என்று ஏசு கூறினாராமே, அப்படிப்பட்ட குழந்தை

களின் நிலை இப்படி இருப்பதா என்ற அடுக்கடுக்கான சிந்தனைகள் அவன் இதயத்தை முட்டி மோதிய போது, அந்த உணர்ச்சிகளின் மோதலில், அவனுக்குப் புதிய சிந்தனையும், செயல் பட வேண்டும் என்ற ஊக்கமும் பிறந்தது இப்படிப்பட்ட நிலையை ஒவ்வொருவனும் கண்டு காணாமல் சென்று கொண்டே இருந்தான் ஆனால் இதற்கு ஒரு விடிவு உண்டாகப் போவதில்லை. மக்களுக்குச் செய்யும் பணிதான் மகேஸ்வரனுக்குச செய்யுபபணி என்ற திருமூலரின் கருத்து ஒவ்வொருடைய இரத்தத்திலும ஊறிக் கலக்க வேண்டும்— என்று கருதியவனாகத் தீவிரமான சிந்தனையில் ஈடுபட்டான்.

இரண்டு நாட்கள் கழித்து அந்தக் குப்பத்துப் பக்கம்சென்று விசாரித்த போது அம்மக்கள் " முன்பு இருந்ததை விட இப்பொழுது நிலைமை கெடுபிடியாக இருக்கிறது. ஒரு வார தவணை கேட்டிருக்கிறோம், என்று குறிப்பிட்டனர் குப்பத்துப் பிரச்சினையைத் தன் பிரச்சனையாக்கிக் கொண்டு அதன் பொருட்டு அங்கு மிங்கு அலைந்து கொண்டிருந்த நந்தனைப் பார்த்து' இந்தப் பிள்ளைக்கு ஏன்தான் இப்படி புத்தி போகுதோ ஊரான் வம்பை எல்லாம் ஏன் இது இழுத்து தன் மேலே போட்டுக்கணும்" என்று வேலைக்காரன் சோமு அங்கலாய்த்துக் கொண்டான். நந்தனைப் பார்த்து "தம்பி.... நமக்கு ஏன் இந்த வேலை= யாரு எப்படி போனா நமக்கென்ன? மற்றவங்க பொல்லாப்பை நாம் ஏன் சம்பாதிச்சுக்கணும்" என்று கூறித் தடுத்த போது நந்தன் அவனுடைய அறியமைக்காகவும், தன்பால் கொண்டிக்கிற அன்பிற்காகவும், அனுதாபப் பட்டானே ஒழியக் கோபப் மடவில்லை. "சோமு, இப்படி ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன என்று நினைப்பது தப்பு. இப்படிப் பொறுப்பற்று இருந்ததனாலேதான் இந்த நிலைக்கு நாடு சீர் கேடு அடைஞ்சிட்டு காலில் தைத்த முள் புரையோடுகிறது என்று தெரிந்த பிறகும் அதை அறுக்காமல் இருப்போமே என்று நினைப்பது அறிவீனம். 'ஏனோ தானோ' என்கிற போக்கு இருக்கிற வரை நமக்கு முன்னேற்றம் இல்லை." என்று அவன் சொன்னதும் "தம்பி...நான் கெழவன் ஏதோ தெரிஞ்சதைச் சொன்னேன்." என்று கூறி விட்டு நழுவலானான்.

சேரியில் உள்ள ஒரு சில இளைஞர்களை அழைத்துக் கொண்டு ஊர்க்காவல் நிலையத்திற்குச் சென்று அங்கு புகார் மனு கொடுக்கச் செய்தான் பின் குப்பத்து வாலிபர்களை எல்லாம் ஒன்று கூட்டி குடிசை வாழ்வோர் சங்கம் என்ற ஒன்றைத் துவங்கினான் "எந்த நிலைமை உருவானாலும் நீங்கள் அனைவரும் அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டையைப் போலத் தனித்தனியாகப் பிரிந்து விடாமல் ஒற்றுமையாக இருந்து போராட வேண்டும். எதற்கும் அஞ்சாதீர்கள்; வருவது வரட்டும். நமமிடம் இருக்கும் கோழைத்தனம் நீங்காத வரை நாம் மற்றவர்களுக்கு அடிமையாகத் தான் இருக்க நேரிடும்'; என்று எடுத்துரைத்தான். மேலும் சேரி மக்களிடத்தில் நூல் நூற்றல் போன்ற சிறு தைத் தொழில்களின் அவசியத்தை எடுத்துக்கூறி, காந்தியடிகளின் திட்டஙகளை யெல்லாம் விளக்கிச் சொல்லி, புத்துணர்ச்சியோடு உழைக்குமாறு வற்புறுத்தினான். குடிசை வாழ்வோர் சங்கத்தின் நடைமுறைகள் சட்டதிட்டங்கள், லட்சியங்கள் அனைத்தையும் அவனே உருவாக்கித் தந்து செயல் படவும் தூண்டினான். சம்பந்தப்பட்ட மேலதிகாரிகட்கு, நில உரிமையாளரின் திடீர்ச் செயல் எவ்வளவு திமிர்ச் செயல் என்பதை விளக்கிச் சங்கத்தின் மூலமே புகார் மனுவை அனுப்பச் செய்தான்.

அவர்களோடு பழகிய கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே நந்தனும் அவர்களுள் ஒருவனாகவே ஆகி விட்டான். சேரி மக்களிடத்திலே அவனுக்கு செல்வாக்கு வளர்ந்தது. முதியவர்கள் முதல் இளைஞர்கள் வரை நந்தனின் யோசனையைக் கேட்கக் காத்திருந்தனர். ஒரு முறை சேரியில் இருந்த ஒரு வீட்டை அடைந்து, நோய் வாய்ப்பட்டிருந்த ஒரு கிழவனுக்கு ஆறுதல் மொழிகள் கூறி விட்டுத் திரும்பிய போது ஏழெட்டு வயதுச் சிறுவன் ஒருவன் நந்தனின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு. 'அண்ணா, அண்ணா, எங்க வீட்டுக்கு வாங்க அண்ணா' எனக் கூறி அழைத்துக் கொண்டு போனான்.

கரிபடிந்து, கூரையிலிருந்து ஒழுகிய மழையின் கரை கோடுகள் சுவரெல்லாம் ஓட, இருண்டு கிடக்கும் ஒரே அறையான அந்தப் பொந்துக்குள் நந்தன் நுழைந்தான். சுவரில் இருந்த மாடக் குழிக்குள் அதிகமான புகை

யைக் கக்கிக் கொண்டு, காடா விளக்கொன்று நெளிந்து நெளிந்து எரிந்துக் கொண்டிருந்தது. சயிறறந்து, மடிந்துப் போன கட்டிலில், இரண்டு முழத்துண்டை இடுப்பிலே கட்டிக் கொண்டு இடுப்பிலே கட்ட வேண்டியதைத் தலையிலே சுற்றிக் கொண்டு கிழவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். கட்டில்காலில் இரும்பு உரலை வைத்து 'லொக்' 'லொக்' என்று அடித்துக் கொண்டு பல்லில்லாத தன் பொக்கை வயால் அசைப்போட்டுக் கொண்டிருந்தார்.

நந்தனை அழைத்துச் சென்ற சிறுவன் "அண்ணே....எங்க நயினாவுக்குக் காய்ச்சல் அண்ணே' என்றான். நந்தனைக் கண்ட கிழவர் திடுக்கிட்டு எழுந்து, எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுக, கூனிக் குழைந்து, "வாங்க, தம்பி, வாங்க" என்று வரவேற்றார். பின் "சாமி....இந்த முதலாளிமார் பண்ற அட்டகாசம் கொஞ்சமும் தாங்கலே....இன்னைக்கு ஒரு முரடன் வந்து வீட்டிலே இருந்தகோழிக் குஞ்சையெல்லாம புடிச்சிட்டுப் போயிட்டான் தடுத்துக் கேட்டதற்கு குண்டாந்தடியாலே தாக்கினான்" என்று சொல்லிக் கொண்டே இடுப்பைப் பிடித்துக்கொண்டு கீழே உட்கார்ந்தார். பக்கத்திலிருந்த கிழவி நந்தனைக் கண்டதும் "சாமி இந்த அக்ரமத்தைக் கேட்க யாரும் இல்லையா?...இந்தக் கடவுளுக்குமா கண்ணவிஞ்சு போச்சி....இந்தப் பாவி எங்களை இப்படி வவுத்திலே அடிப்பதற்கு அவன் ஐயோன்னுதானே போவான்,"

நந்தன் பேச்சை மாற்றவும், அவர்களது எண்ணத்தை வேறு திசையில் திருப்பவும் கருதிச சிறுவனை நோக்கி "பையா, சாப்பிட்டியா" என்றான். அவன் 'காலையிலே டீத் தண்ணி சாப்பிட்டதுதான். எங்க நயினாவுக்குத்தான் காய்ச்சலாச்சே. இன்னைக்கி வேலைக்கிப் போகலே நாயினா வேலைக்குப் போனாத்தான எங்க ஆயி சோறு போடுவா" என்று கண்களைப் பிசைந்து கொண்டே சொன்னான். கைகால்கள் எல்லாம் சூம்பிப் போய் சப்பிய பனங்கொட்டை மாதிரி வயிறு மட்டும் முன்னே தள்ளிப் போயிருந்த அந்தச் சிறுவன் உண்மையில் சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகிப் போயிருந்தது என்பதை அவனது இடுங்கிய கண்களும், இளைத்த மேனியும் எடுத்துக் காட்டின. நந்தன் அவனை நோக்கி "ஏன் உன் கண்கள் இப்படி இருக்கு, தூங்கலியா" என்றான்.

"இல்லே, ராத்திரிக்கி சினிமா கொட்டகையிலே பாட்டுப் புஸ்தகம் விக்கிறேன். சோடா, காப்பி, பீடி, சிகரெட் எல்லாம் கேக்ற வங்களுக்கு வாங்கிக் கொடுப்பேன். ரெண்டு ஆட்டத்துக்கும வேலை செய்வேன். தெனம் நாலணா கிடைக்கும்" என்றான், அவன்.

நேரமாகிவிட்டதால் நந்தன் பெரியவரிடம் விடை பெற்றுக் கொண்டு தெரு வழியாக நடந்து சாலையை அடைந்தான். தெரு முழுதும் கந்தல் துணியைப் போர்த்திக் கொண்டு மரவட்டைப் புழுக்களைப்போல மக்கள் சிலர் சுருண்டு கிடந்தனர். வேலை அசுழ்ந்து கொண்டிருந்த பன்றிகளின் சத்தம் விட்டு விட்டுக் கேட்டது.

'எஸ்டேட் ஏஜண்டி'ன் தொல்லையைத் தடுக்க ஊர்க்காவல் நிலையத்தில் இருந்து ஐந்தாறு போலீஸ்காரர்கள் பாராவுக்குச் சேரிக்கு வந்தனர். போலீஸ் அதிகாரி சில உரிமையாளரை அணுகி மேலதிகாரிகள் விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுகின்ற வரை சேரி மக்களிடைத் தலையிடக் கூடாது என்று எச்சரித்திருந்தார், எனவே கொஞ்ச நாட்களாகப் பழைய கெடுபிடி மறைந்து அமைதி நிலவியது. நில உரிமையாளராகிய திருவருட் செம்மல், ராவ்பகதூர் சிங்காரம் இத்தனைக்கும் காரணம் நந்தனே என்பதை எப்படியோ புரிந்து கொண்டார்.

ராவ்பகதூர் பட்டம் பெற்றுக் கொண்டு குட்டி ஜமீன்தார்களாகவும், வெள்ளை அரசாங்கத்தின் செல்லப் பிள்ளையாகவும் இருந்த அவர் போலீஸ் அதிகாரியின வெறும் மிரட்டல் கண் துடைப்பு வேலைதான் என்று உணர்ந்து கொண்டு சேரி மக்களையும், அவர்களின் சார்பாக நின்று போராடும நந்தனையும் ஒழுக்கும வாய்ப்பை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். எலும்புத் துண்டுகளை விட்டெறிந்தால் கவ்வுதற்கு ஓடி வரும் குக்கல்களைப் போல, ஐந்துக்கும பத்துக்கும் கூட அதிகாரிகள் வாயைப் பிளந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை அவர் அறியாததல்ல. முயற்சி இல்லாமலேயே பெரும் பொருள் ஈட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் மக்களினத்திலே

இருக்கிறவரை எதையுமே பணத்தால் சாதித்துவிட முடியும் திருவருட் செம்மலாகிய ராவ்பகதூர் சிங்காரம் தன் நாற்பதாண்டு வாழ்க்கையில் செய்து முடித்த அத்தனை சாதனைகளும் பணத்தினாலேதான் என்று சொல்லத் தேவையில்லை. இல்லாவிட்டால் சாதாரண வியாபாரியாக இருந்த அவர் இன்று கோடிக்கணக்கான ரூபாய்களுக்குச் சொந்தக்காரராக இருக்க முடியுமா?

குறிப்பிட்ட தினத்தன்று ரெவின்யூ அதிகாரிகள் சேரிக்கு விசாரணை நடத்த வந்திருந்தனர். நடந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தூண்டுதலாக இருந்தவன் நந்தனே என்று சிலர் கருதியதால் அவனையும் பார்க்க விழைந்த அதிகாரிகள் அவன் வீட்டுக்கு ஆளை அனுப்பி அழைத்து வருமாறு கட்டளை இட்டனர். ராவ்பகதூர் அதிகாரிகளுக்குப் பெரிய விருந்து ஒன்று நடத்தி தக்க ஏற்பாடுகளை முன்னமேயே செய்து வைத்திருந்தார்.

விசாரணைக்கு வந்திருந்த அதிகாரிகளும், ராவ்பகதூரும் நந்தனை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். திரும்பி வந்த இரண்டு போலீஸ்காரர்களும் முறைப்படி நின்று 'சல்யூட்' அடித்தபின் 'நந்தன் வீட்டில் இல்லை' என்று தெரிவித்தபோது ராவ்பகதூரின் முகத்தில் ஏமாற்ற உணர்ச்சி நிழலிட்டது.

## 14

"தீதும் நன்மையும் பிறர்தர வாரா
போதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"

—புறநானூறு

தந்தையின் மறைவு குறித்துச் செய்ய வேண்டிய ஈமக் கடன்கள் எல்லாம் ஒருவாறு முடிந்தன. வந்து போய்க் கொண்டிருந்த உறவினர்கள் எல்லாம் இளங்கோவுக்கு ஆறுதல் சொன்னார்கள். அவன் நடைப்பிணம்போல் மாறி இருந்தான். தன் தாயையும் ஒரே தங்கையான திலகத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இளங்கோவின் தலையில் விழுந்தது. தன் எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்க முடியாத நிலையில், வருவோர் போவோரை எல்லாம் வரவேற்று, உபசரித்து, வழியனுப்பிக் கொண்டிருந்தான். கையிலே எஞ்சியிருந்த பணமும் கரைந்து கொண்டிருந்தது. இரண்டு வாரத்திற்குள்ளாகவே நகைகள் சிலவற்றை அடகுவைத்துப் பணம் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நந்தன் இளங்கோவின் ஊருக்கு வந்திருந்தான். நகரத்திலே இருந்துவிட்டு கிராமத்திற்கு வந்தவுடன் அந்த ஊரே அவனுக்குப் புதுமையாக இருந்தது. இளங்கோவின் ஊர் சின்னஞ்சிறு சிற்றூர் என்றுதான் சொல்லவேண்டும். கிழக்கு மேற்காகச் செல்லும் ஒரே தெரு. இரு பக்கமும் நெருங்கினாற்போல் மண் குடிசைகள் இடை இடையே பாழடைந்த காலிமனைகள், தெருக் கோடியில்தான் இளங்கோவின் வீடு இருந்தது. அது ஒன்றுதான் கல் கட்டிடம்.

ஊரில் மண் குடிசைகள் மீது கோரைப் புல்லும், வைக்கோலும் வேயப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிற்கும் முன்னால் நெல் காய வைக்கும் முற்றம் உண்டு. முற்றத்தில் பெரிய பெரிய தொம்பைகளில் நெல்லைக் கொட்டி வைக்கோல் மூடிவைத்திருந்தார்கள். மாடுகளைக் கட்டும் தொழுவம் தனியாக இருந்தது. தெருவின் விளிம்பில குளத்தின் கரைஓரமாக ஆரம்பப்பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. கல்வியின் முக்கியத்துவத்தை விடக் கலப்பையின் முக்கியத்துவத்தை அந்த ஊர் மக்கள் அதிகம் அறிந்திருந்ததால் பள்ளிக்கூடக் கட்டிடம் கூடக் கவனிப்பற்ற நிலையில் காட்சி தந்தது. பள்ளிக் கூடத்தை அடுத்து ஊருக்கு வேலி கட்டி வைத்தது போல் வெயில் புகாத இருண்ட புளியந் தோப்பும், மூங்கில் புதரும் இருந்தன. புளியந் தோப்புக்கு அப்பால் வீரசோழன் ஆறு ஊரைச் சுற்றி வளைத்து ஓடிக் கொண்டிருந்தது. அதன் இருமருங்கிலும் தாழம் புதர்கள் மடல் அவிழ்ந்து நெடுந்தொலைவு மணம் பரப்பிக் கொண்டிருந்தன.

நந்தனுக்கு அந்த ஊரின் அமைதியும், இயற்கைச் சூழலும் நன்கு பிடித்திருந்தது. தங்கி இருந்த இரண்டு மூன்று நாட்களும் இளங்கோவுக்கு ஆறுதல் சொல்லுவதிலேயே கழிந்தன. இளங்கோ அவனிடம் தன் குடும்ப நிலை அனைத்தையும் விரிவாக எடுத்துரைத்தான். தன்னுடைய சிற்றப்பா இருவரும் தந்தையார் இறந்தது முதல் வீட்டுக்கே வர

வில்லை என்றும், சமச் சடங்குகளில் கலந்து கொள்ளவும் இல்லை என்றும் கூறினான்.

"நீ உன் சிற்றப்பா இருவரையும் கூப்பிட்டாயா? அவர்கள் வராவிட்டாலும் நீயாவது கூப்பிட்டிருக்கலாமே!" என்று கேட்டான் நந்தன்.

"நான் கூப்பிடவில்லை; அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். வரவில்லை; நானும் சும்மா இருந்து விட்டேன்."

"அதுதான் தவறு; நீயாவது விட்டுக் கொடுத்திருக்கலாம். அது சரி, உன் தந்தை யாருக்கும், அவர்கட்கும் மனவேறுபாடுவரக் காரணம் என்ன என்று தெரியுமா?"

"எல்லாம் பணம்தான்"

"என் தந்தையார் சிற்றப்பா முத்தையாவிடம் 200 ரூபாய் கடன் வாங்கி இருந்தார். அவர்கள் கேட்டபோது என் தந்தையால் கொடுக்க முடியவில்லை. பணம் வேண்டாம், பணத்திற்கு ஈடாக நிலத்தை என் பெயருக்கு எழுதிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டார், ஐநூறு ரூபாய் மதிப்புள்ள நிலத்தை இருநூறு ரூபாய்க் கடனுக்கு எழுதிக் கொடுக்க மாட்டேன் என்று என் தந்தையார் மறுத்துவிட்டார். மற்றொரு சிற்றப்பா இருக்கிறார். அவர் தன் நிலம் அனைத்தையும் சூதாட்டத்திலேயே இழந்தவர். சிட்டாடிச் சிட்டாடியே எல்லா நிலத்தையும் விற்று விட்டார். பாதி நிலத்தை அவர் போடும் மூக்குப் பொடிக்கே செலவிட்டு விட்டார். அவருக்கு ஐந்தாறு குழந்தைகள். மூத்த பெண் திருமணத்திற்குக் காத்துக் கொண்டிருக்கிறாள். அவருக்கு நாங்கள் பணம் கொடுத்து உதவவில்லையாம். அதனால் அவருக்கும் எங்கள்மீது கோபம்! இதுதான் நடந்தது" என்றான்.

"இளங்கோ, நன்மையும் தீமையும் பிறர் கொடுத்து நமக்கு வருவதில்லை. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என நீ படித்ததில்லையோ? துன்பத்தைக் கண்டு வருந்துவதும், இன்பத்தைக் கண்டு மகிழ்வதும் தேவையே இல்லை. மனத்தை அந்த நிலைக்கு மாற்றிக் கொள்ளாவிட்டால் வாழ்க்கை முழுக்க முழுக்க நரகமாக மாறிவிடும். சரி.... நீ இப்பொழுது செலவுக்கு என்ன செய்கிறாய்?"

"நீ கொடுத்த பணம் தீர்ந்து விட்டது. வயல்களை அடகு வைத்து 300 ரூபாய்கள் வாங்கினேன். எப்படியோ சாப்பாட்டிற்குக் கவலையில்லை. போதுமான நெல் மட்டும் இருக்கிறது. அப்பா இன்ஷ்யூர் செய்து வைத்து இருக்கும். பத்தாயிரம் ரூபாயும் இன்னும் ஐந்தாறு மாதத்தில் வந்துவிடுமாம். வருகின்ற பணத்தில் உள்ள கடனை எல்லாம் ஒருவாறு தீர்த்துவிட்டு எஞ்சியதை வைத்துக் கொண்டு தான் குடும்பத்தை நடத்த வேண்டும்"

"உன் உறவினர்கள் யாரையும் நீ வீணாகப் பகைத்துக் கொள்ளாதே. காலப் போக்கில் அவர்கள் மாறிவிடுவார்கள். எப்படியாவது இந்த ஆண்டு படிப்பையும் முடித்துவிடு. இண்டர் முடித்துவிட்டால் எப்படியும் வேலை கிடைத்துவிடும். பிறகு உனக்கு ஒரு தொல்லையும் இருக்காது. நீ மட்டும் மனதைத் தளரவிடாதே."

இளங்கோவின் கண்கள் கலங்கின. நந்தன் அதுகண்டு வருந்துவானே என்பதற்காக ஏதோ வேலையாக உள்ளே செல்பவன் போல உள்ளே சென்று முகத்தைத் துடைத்துக் கொண்டு மீண்டும் திண்ணைக்கு வந்தான்.

"உலகத்திலே உள்ள துன்பங்கள் அனைத்தும் உன்னிடத்திலேயே வந்து விட்டதாக நீ நினைக்கிறாய். உன்னைவிடக் கஷ்டப்பட்டவர்கள்—கஷ்டத்தை அனுபவிப்பவர்கள்—இருக்கிறார்கள். உன் நிலையைக் கண்டு இன்றைக்கு ஒதுங்கிச் செல்பவர்கள்—ஓரப் பார்வை பார்ப்பவர்கள்—எல்லோரும் பிற்காலத்தில் உன் தயவை நாடத்தான் போகிறார்கள். உன் அறிவாற்றலுக்கு நீ புகழேணியின் உச்சாணிக் கிளையைத் தொடத்தான் போகிறாய். காணுகின்ற கனவுகளை எல்லாம் நாம் எப்படி நினைவிலேயே வைத்துக்கொள்வதில்லையோ அதுபோலத் துன்பங்களையும் மறந்துவிடவேண்டும்" என்று நந்தன் எடுத்துக் கூறினான்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. நந்தனுக்குச் சேரி மக்களின் நினைவு வந்தது. "சேரி மக்களின் நிலை என்ன ஆயிற்று என்று

தெரியவில்லை. நான் உடனடியாகச் சென்று பார்க்கவேண்டும். நான் இன்று, ஊருக்குப் புறப்படலாம் என்று இருக்கிறேன்'' என்றான் நந்தன். அவன் தன் பக்கத்தில் இருந்தவரைத் தனனிடத்திலே ஏதோ ஒரு அசுர பலம் இருப்பதாக நினைத்து மனம் கலங்காமல் இருந்த இளங்கோ அவன் ஊருக்கு போக வேண்டும் என்று சொன்னவுடன் நிலை கலங்கினான்.

''ஏன் தான் இப்படிப் பறக்கிறாயோ, தெரியவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் கழித்துப் போகலாம். சொல்வதைக் கேள்'' என்று கூறி இளங்கோ தடுத்தான்.

''வேலை நிறைய இருக்கிறது. ஊருக்குப் போகவேண்டும். அப்பா கட்டாயம வந்து விடு என்று கடிதம் எழுதி இருக்கிறார்கள்.''

''சரி, உன் இஷ்டப்படி நடந்துகொள். பிறகு என்னை ஏன் கேட்கிறாய்.''

நந்தனுக்கு நிலைமை தர்மசங்கடமாகி விட்டது, ''நீ ஏன் இப்படி முகத்தை வைக்துக் கொள்கிறாய். நான் தான் தங்குகிறேனே நீ எப்பொழுது போகச் சொல்கிறாயோ, அப் பொழுது போகிறேன். சரிதானே'' என்று சொலலிய போதுதான் அவனுக்கு உயிர் வந்தது போல இருந்தது. மறுபடியும் ஐநதாறு நாட்கள் கழிதது நநதன் புறப்பட்ட போது இளங்கோ அவனை அனுமதிக்கத் தயங்கினான. அவன் தனனோடேயே இருக்க வேண்டும என்பது போனற உணாவு ஏற் பட்டது. தனது அன்புக்குரியவர்களைத் தன்னோடேயே வைத்துக கொளளவேண்டும் எனற எணணம கூட ஒருவகையான ஆதிகக உணாவுதான். அநத உணாவு தன னுள் ஒடுங்கி நிறபதை இளங்கோ உணர்நதான.

''அன்புடையார் தம்மாட்டுக் சொல்லுப வற்றை மறுக்காமல் ஏற்றுக் கொள்வது நல்ல பண்புதான். ஆனால் அன்பே தளையாக அமைந்துவிடக கூடாது. நான் இதற்குமேல் உனக்கு என்ன சொலல முடியும? நான் போகிறேன். விடுமுறை கழிநததும கல்லூரிககு வா, எந்தக் காரணததாலும படிபபை விட்டு விடாதே'' என்று சொலலிவிட்டு நந்தன் புறப்பட்டபோது, அவனை இனியும் தடுக்க முடியாது என்று உணர்நது மௌன மாக விடை கொடுத்து அனுபபினான். நநதன் புறப்படும்போது இளங்கோவின் தங்கை திலகம் ''போயிட்டு வாங்க அண்ணா, அடிக்கடி வாங்கோ...மறந்திட மாட்டீங்களே'' என்று மழலை மொழியால் கூறியபோது அவனுக்கே சற்று துன்பமாகத்தான் இருந்தது.

விடுமுறை கழிந்து கல்லூரி திறக்கப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்ஷ்யூரன்ஸ் பணம் உடனடியாக வரும் என்ற நம்பிக்கை இல்லை. கடன் தொல்லை அதிகமாகிக் கொண்டு வந்தது. தந்தையார் இறந்து விட்ட நாள் முதல் கடன்காரர்கள் வந்து போய்க் கொண்டே இருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணததைக் காட்டிச் சாமாதானம் சொல்லிக் கொண்டே வந்தான் இளங்கோ.

பக்கத்து நகரிலிருந்த பெரி. பழ மு. காசி விசுவநாதன் என்ற பேங்கர் நேரடியாகவே வீட்டுக்கு வந்து ''இன்னும் ஒரு மாதத்திற்குள் சேர வேண்டிய தொகை அனுப்பி வைககாட்டா கோர்ட்டிலே தாவா கொடுத்திடுவேன். தாவர சங்கமச் சொத்துக்கள் அத்தனையும் ஜப்திக்கு வந்திடும்'' என்று கூறினார்.

''ஐயா, நாங்கள் பணத்தை எடுத்துக் கொணடு ஏமாத்திட மாட்டோம். இன்ப நிலைமை சரி இல்லை. கொஞ்சம பொறுததுக் குங்கோ......கணக்கைத் தீர்த்திடறேன்'' இளங்கோ எவ்வளவோ கூறினான்.

''கஷ்டம் உங்களுக்கு மட்டும்தான் இருக்கா? எங்க பணததைக் கொடுததிட்டு நாங்க ஏன் உங்க வீட்டுக்கு அலையணும், நொண்டிக் குதிரைக்கு சறுககினது சாககு. கொடுக்கக் கதியத்த உங்களுக்குச் சால்சாப்பு வேறேயா?

''ஐயா, கொஞ்சம் மெதுவாக. பேசுங்க நமககுளளே உளள கணக்கை நாமே பேசி தீர்ததுக் கொள்ளலாம். இப்படிக் கத்தி ஏன் ஊரையெல்லாம் திரட்டணும்?''

''மகா மனுசன் தான்யா....மான அவமானத்துக்குப் பயந்தா மரியாதையா என் கணக்கைத் தீர்க்காமல் இருபபீர்களா?'' என்று இரைந்து விட்டு பேங்கர் காரில் ஏறிக் கொண்டார்.

அவரை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான் இளங்கோ, "கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினன் இலங்கை வேந்தன்" என்ற பாடல்வரி நினைவுக்கு வந்தது.

ஒரு வாரத்திற்குள் தரகர் ஒருவர் மூலம் இரண்டு மா நிலத்தை விலைபேசி முடித்து விற்று பணமாக்கினான். தனக்கு வேண்டியது போக மீதியை தாயின் கையில கொடுத்தான். கடன் காரர்களுக்குப் பாதிக்கு பாதி என்ற அளவில் ஓரளவு கொடுத்தான். பள்ளிக்கூடம் திறந்ததும திலகத்தை வகுப்புக்கு அனுப்பி வைத்தான். மேல் வகுப்புக்குச் சென்ற அவளுக்கு வேண்டிய புத்தகங்கள், உடைகள் முதலியவற்றை வாங்கிக் கொடுத்தான். கடன் காரர்களின் தொல்லை ஓரளவு தீர்ந்தது, பேங்கர் விசுவநாதனிடம் முழுப் பணத்தையும் தூக்கி எறிந்தபோது "உட்காருங்க தம்பி....போகலாம...,காலமாயிட்ட உங்க அப்பாவுக்கு நானும் ரொமபப் பிரியமாப் பழகினேம். என்னவோ திடீர்ன்னு அவர் கண்ணை மூடிட்டார். நாம்தான் கொடுத்து வைக்கலே....ஏதோ, நல்ல குடும்பத்துப்பிள்ளை நீங்க படிச்சி முன்னேறணும் அதுதான் என் அபிலாஷை" என்று வாயெல்லாம பற்கள் தெரிய முகமன் பாடினார். 'இருமனப் பெண்டிர் என்று வள்ளுவர் பாடியிருக்கிறார், பெண்களுக்கு மட்டுமல்ல. எல்லோருக்குமே இரண்டு மனங்கள்தான் இருக்கின்றன. பணத்தைக் கண்டால் ஒருமனம் பணமில்லாவிட்டால் ஒருமனம, எல்லோருமே இருமன மனிதர்கள்தான்" என்று இளங்கோ தனக்குள் எண்ணிக் கொண்டான்.

நந்தனிடம் இருந்து கடிதம் வந்திருந்தது. "கல்லூரிக்கு வந்துவிடு. ஆகின்ற செலவு ஆகட்டும எதற்கும் கவலைப்படாதே" என்று எழுதி இருந்தான. அன்று காலையில் தற் செயலாகப பத்திரிக்கையைப் புரட்டியபோது அந்தச் செய்தி அவன் பார்வையில் பட்டது. அதுவரைத் தன் நினைவுக்கும் மறதிக்கும் இடையில் உறங்கிக் கொண்டிருக்கும நினைவுகள விசுவரூபம எடுத்து நர்த்தனம் புரிவது போல உணர்ந்தான் எழில் மதியின் வீணை அரங்கேற்றம் சுவாமி மலைக கோயிலில் பலர் முன்னிலையில நடந்தது என்றும், பிரபல வீணை வித்துவான் கலாசாகரம், திருமயம். புஷ்பரதம் பிள்ளை அவர்கள் எழில் மதிக்கு 'வீணாமணி' என்ற பட்டம கொடுத்ததாகவும் செய்தித்தாளில் அச்சிடப்பட்டிருந்தது. அத்துடன் எழில்மதி வீணை வாசிப்பதுபோன்ற படமும் அதில் வெளியாகி இருந்தது. இளங்கோவின் உதடுகள் அவளைப் பற்றித் தான் எப்பொழுதோ எழுதிவைத்திருந்த கவிதையின் வரிகள் சிலவற்றை முணுமுணுத்தன.

"வீணைக் கரமுடையாள் — அவள்
மழலைக் கிளிமொழியாள்
நாணித் தலைகுனிந்தே — மயில்போல்
நடந்து வந்திடுவாள்"

கவிதை வரிகளை அவன் மனம் மீண்டும் மீண்டும் எண்ணியது.

"அண்ணா, லெட்டர் வந்திருக்கண்ணா" என்று சொல்லிக்கொண்டே திலகம் ஒரு உறையைக் கொடுத்தாள். "தங்கள் தந்தையின் மறைவை அறிந்தேன். என் ஆழ்ந்த அனுதாபங்கள்" என்று எழுதி எழிலமதி அதில் கையெழுத்திட்டிருந்தாள். அதைப் படித்த இளங்கோ தன்னையே நம்பமுடியாதவன் போலக் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான்.

விடுமுறை கழிந்து கல்லூரி திறக்கும் நாள் நெருங்கியது. இளங்கோ குடந்தைக்குப் புறப்பட்டான்.

## 15

கைப்பட்ட அமுதினை எறிந்துசிறு கூழின்மேல்
காதல்பட் டவர்போலவும்
கதிர்பட்ட சுடர்விளக்கு எதிர்ப் பட்டிருந்தும்
கனல்தேடு வார்போலவும்

—சதாவதானி சரவணப் பெருமாள் கவிராயர்

அன்று மாலை அத்தையிடம் சொல்லிக் கொண்டு எழிலமதி டவுனுக்குப் புறப்படும் போது மாலை மூன்று மணி இருக்கும. நேராகக் காந்தி நகரை அடைந்து வசந்தியின் வீட்டுக்குச் சென்றாள். அவள் வீட்டில இல்லை என்று தெரிந்ததும் ஏதோ கால் விட்ட வழியாகக் காவேரிப் பரப்பை வந்தடைந்தாள்.

இருள் கவிந்து கொண்டிருந்தது. தூரத்தில இருந்த விளக்கு கம்பங்களிலிருந்து புறப்பட்ட ஒளி தழை மரங்களை ஊடுருவிக்

கொண்டு நேர்க் கோடாக மணற்பரப்பில் விழுந்தது. இரண்டாம் ஆட்டம் சினிமாப் பார்ப்பதற்காக நாசிங்கம் பேட்டையிலிருந்து தன் தோழர்களோடு புறப்பட்ட பாலிட்டிக்ஸ் சங்கரன் பொழுது போக்குவதற்காகக் காவிப் பாயிற்கு வந்து உட்கார்ந்தான். சிலிர்த்துக் கொண்டிருக்கும் பரட்டைத் தலையை ஏதோ ஒருதாளகதியில் ஆட்டிக்கொண்டே தன் தோழன் வெள்ளைப் பாண்டியைப் பார்த்து "என்னா'ேவ இசகிட்டு உட்காரேன் நானு சொல்லிக்கிட்டே இருக்கேன், கேக்காம நிக்கிறியளே" என்றான். பின் அணைத்துவைத்திருந்த பீடித் துண்டைப் பற்றவைத்து உறிஞ்சி புகையை வாயாலும் மூக்கினாலும் கக்கிக் கொண்டு, எருமை போலப் பெருத்துக்கிடந்த தன் பூதாகரமான உடலை மணலில் போட்டு ஒரு புரட்டு புரட்டினான், பக்கத்தில் உட்கார்ந்த வெள்ளைப் பாண்டி "சங்கரா.... உனக்கு ஒரு சேதி தெரியுமா? அந்த இளங்கோப் பயல் இந்தப் பாட்டுக் காரியை நெனச்சு ஏங்காரான். அவ என்னடான்னா நந்தன் கிட்டே குழையறா...." என்றான். அக்கப்போர் விஷயம் என்றால் அதை 'பிராட் காஸ்ட்' செய்வதில் முன்னே நிற்கும் சங்கரன் சட்டென எழுந்து இதோ பாரு கிளைமாக்ஸ் கட்டம் இனனும் வாலே... பிறகுதான் வேடிக்கை இருக்கு என்றான். பின் பீடியை அணைத்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். புகை மண்டையில் ஏறிய வேகத்தில் தும்மியபோது அவன் தலை தானாக வேறு பக்கம் திரும்ப, அவன் பார்வையும் தூரத்தில் விழுந்து பதிந்தது. அங்கே நந்தனும் எழில்மதியும் சென்று கொண்டிருப்பது மங்கலாகத் தெரிந்தது. சங்கரன் வெள்ளைப் பாண்டியிடம் கண்ணைச் சிமிட்டிக் காட்டிவிட்டு நன்கு உற்றுக் கவனித்தான். தெருவில் வந்து கொண்டிருந்த லாரியின் வெளிச்சத்தில் அவர்கள் நந்தனும் எழில் மதியுமே எனத் தீர்க்கமாக முடிவுகட்ட முடிந்தது. நெடிய உருவமும். வெள்ளை ஜிப்பாவும், நிமிர்ந்த நடையும் அவன் நந்தன் தான் என்று நிரூபித்துக் கொண்டிருந்தன. தனக்கு இன்னும பத்து நாட்களுக்குப் பேசிக் கழிக்க 'சப்ஜெக்ட்' கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் சிலிர்த்துக் கொண்டு நிற்கும் தன் பரட்டைத் தலையை 'ரிதம்' தவறாமல் ஆட்டிக் கொண்டே "வெள்ளைப் பாண்டி, வா, இப்பவே புறப்படலாம். இப்பவே கியூவிலே நின்னாத் தான் டிக்கெட் கிடைக்கும்" என்று கூறி அவனை அழைத்துக் கொண்டே அப்பால் சென்றான்.

தூரத்தில், மணற்படுகையில் சற்று சந்தடி யற்ற சூழ்நிலையில் நந்தனும் எழில்மதியும் அமர்ந்திருந்தனர். இடக்கையை மணற் பரப்பில் ஊன்றியவாறு கால்களை நீட்டி சற்று ஒருக்கணித்து உட்கார்ந்திருந்தாள் எழில்மதி மருதாணி போடாமலே செக்கச் சிவந்திருந்த அவள் கைகள் தாழம்பூவின் தாது போன்றிருந்த மணற் பரப்பிற்குள் மூழ்கி, மூழ்கி எழுந்து கொண்டிருந்தன. பின்னப்பட்டிருந்த நீண்ட சடை, முன்பக்கம் விழுந்து கிடந்தது. பக்கத்தில், மணற் சரிவில் நந்தன் சாய்ந்து படுத்துக் கொண்டே தலையை மட்டும் நிமிர்த்தி அவளையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். கருநாவற் பழங்களை வென்று காட்டும் நீல விழிகளுக்குக் கீழே, சிந்தாமல் சிதறாமல் அழகையெல்லாம் திரட்டி எடுத்து, ஓரிடத்தில் வைத்தது போலவும், அழகின் முதலும் முடிவும் இதுதான் என்று தீர்மானித்து ஓவியன் ஒருவன் அந்த இடத்தில் தன் கைவண்ணத்தை எல்லாம் காட்டிச் சித்தரித்தது போலவும் இனம் தெரியாத கொள்ளை வனப்பு அவளது குமிழம்பூவை ஒத்த மூக்கில் நிறைந்து பொலிந்திருந்ததை மனக்கிறக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பொங்கித் ததும்பும் அவளது அழகை இத்தனை நெருக்கமாக, அண்மையில், எத்தனையோ முறை அவன் பார்த்திருந்தாலும் இன்று அதை அப்படியே தொட்டுப்பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் அலை பாய்ந்தது. இயற்கையாகவே அழகுற அமைந்திருந்த தன் வதனத்தின் வனப்பை செயற்கை மெருகு எதும் கொடுக்காமலேயே அவள் வைத்திருப்பதைப் பார்த்தபோது, அதனூடே அவளுக்கே உரிய ஒரு மனப் பண்பாடும் நந்தனுககுத் தெரிய வந்தது. புன்னகை புரியும் போது, மின்னலிட்டு விநாடி நேரத்திற்குள் மறையும் அவளது சின்னஞ் சிறு பற்கள் மயிலிறகின் அடிப்புறம் போல பளிச்சிடுவதைக் கண்டு ரசித்தான்.

நந்தன் அவளிடம் குடிசை வாழ் மக்களின் சார்பாக நடந்த வழக்கைப் பற்றியும், வழக்கில் பெற்ற வெற்றி பற்றியும், இளங்கோவின் கிராமததிற்குத் தான் சென்று வந்தது பற்றியும் கதை கதையாகக் கூறிமுடித்துவிட்டு

மௌனத்தில் ஆழ்ந்திருந்தான். அளவுக்கு மீறிய பேச்சும், அதிகமான மௌனமும் காதல் உலகத்தில் புதுமைக்கு உரியன அல்ல இரண்டுக்கும் ஒரே பொருள்தான். அது தான் உவகை என்பது.

நீண்ட நேர அமைதியைக் கலைப்பவன் போல "எழில்மதி...இப்ப நீ ஏன் அமைதியாக இருக்கே" என்றான்.

"நீங்களும்தான்" என்றாள் அவள்.

"உலகம் . பெண்களுக்கு இளவயதிலே வியக்கப்படும் பொருளாக இருக்கிறது. பிறகு பெண்களே உலகத்தால். வியக்கப்படும் பொருளாக மாறி விடுகிறார்கள். உன் பாதங்களைப் பார்த்ததும் எனக்கு இந்த எண்ணம் தான் பளிச்சிடுகிறது" என்றான். அவள் முகம் சிவந்து கவிழ்ந்தது.

அவன் தன் விரல்களால் அவளது பாதத்தைத தீண்டினான். நாயின் நாக்குப் போன்றிருந்த அந்தச் சிறடிகளை மெல்ல அழுந்தப் பிடித்தான். அவள் கால்களைச் சுருக்கிக் கொண்டாள்.

"எழில்மதி....நான் உன்னைத் தொடக் கூடாதா"

"கால் அழுக்கில்லையா.......?" அவள் பேச முடியாமல் தணறினாள்.

"அன்னத்தின் தூவிகூட நெருஞ்சிப் பழமாக உறுத்துமாம். என் கை உனக்கு நெருஞ்சியாகி விட்டதா?"

அவள் அவன் கையைத் தன் கையில் எடுத்து வைத்துக்கொணடு "அப்படியா நான் நினைககிறேன" என்று ஆதரத்தோடு கேட்டாள். இறுகி இருந்த கைகளின் பிணைப்பு மெலல நெகிழ்ந்தது.

"நீங்கள் தவறாக நினைக்காதீர்கள். கொஞ்ச காலம் பொறுததிருப்போம். நம் ஆசை அசுற்று முனைமேய்ய நமமை அழித்துவிடக் கூடாது."

நெகிழும் அவள் காங்களைக் கெட்டியாகப் பிடித்துக கொண்டு 'ஆமாம்" என்றான். இருவரும் மீணடும் அமைதியில் ஆழ்ந்தனா. வெளிப்படும் சொற்கள் அஙகே ஆற்றலற்று வெற்றோசையாய்ப் போய்விடுகின்றனவோ,— சொல்ல வேண்டும் என்று நினைக்கிற பல செய்திகள், சொல்லுவதற்கே ஒன்றும் இயலாததுபோல எங்கே மறந்து போய் விடுகின்றனவோ — அந்தச் சமயத்தில் அந்த இடம் உணர்வுகளால் பிணிக்கப்பட்டுவிட்டது என்று நாம் திட்டவட்டமாகக் கருதலாம்.

"நான் நாளைக்கு ஊருக்குப் போகிறேன். அத்தையும் வருகிறார்கள். ஊரில் உறவினரின் வீட்டில் ஒரு திருமணம் என்றாள் எழில்மதி.

"அப்படியானல் ஊருக்குச் செல்லும் 'வீணை மணி' எழில்மதி தேவியார் ,எப்பொழுது திரும்புவார்கள்?" என்று குறும் போடு கேட்டான் நந்தன்.

எழில்மதி சிரித்துக்கொண்டே "இந்தக் குறும்புக்கு மட்டும் உங்களுக்குக் குறைவில்லை. கல்லூரி திறக்கிற அன்று .வந்து விடுவேன். எனக்குக் கூடப் போகப் பிரியம் இலலை அத்தை வற்புறுத்துகிறார்கள்" என்று முடித்தாள்.

"எழில்மதி, திருமணத்தின் போது நாதஸ்வர வித்வான்கள் ஊதுகிறார்களே . அது என்ன ராகம்?" என்றான்.

"பிலஹரி"

"அப்படியா, நமக்கு எப்பொழுதும்பிலஹரி ராகம் ஊதுவார்கள்.

"நீங்கள்தான் அதை ஊத வைக்க வேண்டும" இருவரும் 'கொல்'லென்று சிரித்தனர். பிறகு எழில்மதி எதையோ நினைத்துக் கொண்டவள் போல "அன்றைக்கொரு நாள் ஏதோ ஒரு கதையை ஆரமபித்துப் பாதியிலேயே விட்டு விட்டீர்களே...அதைச் சொல்லுஙகளேன்" என்றாள்.

"கதையா? நான் எப்பொழுது சொன்னேன்?"

"பார்த்தீர்களா? மறுபடியும் விளையாடுகிறீர்களே! சொல்லக் கூடாதா?"

அவன் கதை சொல்லத் தொடங்கினான். அவள் நெருஙகி உட்கார்ந்தாள். எழில்மதி... இது பாரசீகக் கதை, உலகமா காவியஙகளில் இதையும் தலை சிறந்தது என்று போற்று

கிறார்கள். 'ஷாநாமா' என்ற காவியத்தை எழுதித் தந்த 'பிர்தௌஸி'யின் சமகாலத்தவன்தான் இந்தப் புலவன்"

"சரி, கதைக்கு வாருங்கள். யூசுப் ஜுலைகாவை அடியோடு மறந்து விட்டானா? அவள் என்ன ஆனாள்?"

நந்தன் அவளது விரல்களை மெல்ல வருடிக் கொண்டே "பிறகு என்ன? அவள் அவனை மறக்கவில்லை; ஆனால் அவன் மறந்து விட்டான். யூசுப்பின் நினைவிலேயே தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டு கடைசிவரை வாழ்ந்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டாள். ஒவ்வொரு நாளும் அவனோடு கழித்த இன்பமயமான அந்தப் பழைய நாட்களை நினைத்துக் கொள்வாள். பகலின் வெம்மை தணிந்தவுடன், குளிர்ந்த நிலவொளியில், பேரீச்ச மரங்கள் அடர்ந்திருந்த தோப்பில் அவர்களது இருதயங்கள் ஆயிரமாயிரம் காதல் மொழிகள் பேசிக் கொண்டதை யெல்லாம் எண்ணி எண்ணி பெய்சிலிர்த்தாள் நீர் சிந்தி அறியாத அவர்கள் கண்கள் ஒன்றையொன்று விழுங்கப் பார்த்த வேடிக்கையை எண்ணி எண்ணி சிரித்துக் கொள்வாள். அந்த இன்பத்தைத் தொடர்ந்து அனுபவிக்கக் கொடுத்து வைக்காத துரதிர்ஷ்டத்தை நினைத்து நெஞ்சம் குமைந்தாள். ஒருநாள் ஜுலைகா தன் வீட்டு முற்றத்தில் தன்னந்தனியாக நின்று கொண்டிருந்தாள்.

"ஏன்? அவளுக்கு என்ன ஆயிற்று?"

"வானம் நிர்மலமாகத்தான் இருந்தது. கணக்கற்ற காதலர்களின் கண்விழுந்து மூளியாகிவிட்ட பிறைச் சந்திரனின் களங்கம் அன்று சற்றுத் தெளிவாகவே அதனுள் தெரிந்தது. இரவின் குளுமை கூட கோடை காலத்து நடுப்பகல் போல வெம்மையைக் கொடுத்தது. அதற்கேற்றாற்போல், கீழே அடி வானத்தில் குவிந்து கிடந்த கருமேகங்கள் வெடிபோல் இடித்தன. தற்கொலை செய்து கொண்டுவிடலாமா என்ற எண்ணம் கூட அவளுக்கு எழுந்தது. உணர்ச்சியின் உத்வேகத்தில் நஞ்சைப் பாலில் கலக்கி - குடிக்கவும் துணிந்துவிட்டாள். உணர்வு அடங்கி அறிவு விழித்துக் கொள்ளவும் அச்செயல் தகாது என உணர்ந்து தன்னை மாற்றிக் கொண்டாள். காலம் மாறியது. அவளுடைய வாழ்விலே எத்தனையோ திருப்பங்கள் ஏற்பட்டன. நினைவில் வேட்கையையும், நெஞ்சத்தில் வேதனைகளையும் சுமந்து கொண்டே வாழ்நாளின் பெரும்பகுதியை வாழ்ந்து கழித்தாள். சொல்தளர்ந்து, கோல் ஊன்றி, சோர்ந்த நடையினளாய், ஒரு ஏழைக் கிழவியாக ஒரு ஊரில் ஜுலைகா வாழ்ந்து கொண்டிருந்தாள்."

கதையைச் சற்று நிறுத்திவிட்டு நந்தன் எழில்மதியை நோக்கினான். அவளது கண்கள் கலங்கி இருந்தன. அவனது தோளிலே அவள் தலை கொஞ்சம் சாய்ந்திருந்தது.

"பிறகு என்ன...? யூசுப் அவ்வளவு கொடியவனா? ஜுலைகாவை அவன் பார்க்கவே இல்லையா?" எனப் பதட்டத்தோடு கேட்டாள்.

காவிரிப் பரப்பில், உட்கார்ந்திருந்த ஒரு சிலரும் எழுந்து போய் விட்டனர். இருள் நன்கு பரவி இருந்தது. நந்தன் மேலும் தொடங்கினான்.

"யூசுப் ஒரு அரச குமாரியை மணந்து, அந்த நாட்டின் அரசனாகவும் மாறிவிட்டான். ஒருநாள் யூசுப் தன் கிழ வயதில் குதிரை வீரர்கள் புடைசூழ ஜுலைகா இருந்த தெரு வழியாக வந்துகொண்டிருந்தான். இத்தனை ஆண்டு காலமாக ஒருவரை ஒருவர் கொஞ்சமும் தெரியாமலே வாழ்ந்து கொண்டிருந்த அவர்கள் அன்றுதான் மீண்டும் சந்தித்தனர். யூசுப் தம் ஜுலைகாவைப் போலவே முதுமையின் எல்லைக் கோட்டில் நின்று கொண்டு இருந்தான். தன் வீட்டு வாசலில் முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்த ஜுலைகா குதிரையின் மீது வந்த அந்த வீரனை தற்செயலாகப் பார்த்தாள். அவள் விழிகள் வியப்பால் மலர்ந்தன. அவனும் அவளை

எதிட்டு நோக்கினன். இருவருடைய நெஞ்சமும், தடம் மாறிவிட்ட தங்களது பழையகால வாழ்க்கையை ஒருகணம் எண்ணிப் பார்த்தனவோ என்னவோ, சட்டென ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொண்டனர். குதிரையிலிருந்து கீழே குதித்தான் யூசப், அவளை நெருங்கித் தன் வலிமை கொண்ட கைகளால் அவள் தோளைப் பிடித்துக் குலுக்கியவாறே "ஜுலைகா" என்று அழைத்தான். 'யூசப்' என்ற அலறலோடு அவள் அவன் காலில் விழுந்துவணங்கினள். கண்ணீர் மல்க, குரல் தழு தழுக்க, அவளைத் தூக்கி நிறுத்தினன்."

விம்மி அழும் ஒலி கேட்டுக் கதையை நிறுத்தினன் நந்தன். எழில்மதி நந்தனின் தோளில் சாய்ந்தபடியே "நந்தன்...என்னையும் ஜுலைகாவின் கதிக்கு ஆளாக்கிவிட்டுவிடாதீர்கள்" என்று தேம்பிக் கொண்டே சொன்னள்.

"இதோ பார்....நான் உன்னை யூசப் கைவிட்டதுபோல விட்டு விடமாட்டேன்.... என்னைப் பார்..." என்று தேற்றினன். மேலும் "கதையக்கூட உண்மை என்று எடுத்துக் கொள்கிறாயே..." என்று அங்கலாய்த்தான். பாரசீகக் கவிஞன் ஒருவனல் எழுதப்பட்ட யூசப்—ஜுலைகா காவியம் கேட்ட அளவிலேயே அவள் உள்ளத்தை உருக்கிவிட்டதை வியந்தவனக அந்தக் கவிஞனுக்கு மானசீகமாகத் தன் அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டான்.

எழில்மதி எழுந்தாள். சரிந்து புரண்ட கூந்தலில் இருந்த ஒற்றை ரோஜா நந்தனின் பாதத்தில் விழுந்தது.

"இதோ பூ விழுந்துவிட்டது" என்றான்.

"எடுக்காதீர்கள்! அது சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்துவிட்டது. நந்தன், இது போலவே தங்கள் பாத கமலங்களை நாள் தோறும் வழிபட்டு வாழும் வாய்ப்பை எனக்குத் தரவேண்டும்..."

அவளது விழிப் பூவிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த் துளிகள் நந்தனின் பாதத்தில் விழுந்தன.

நந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள் எழில்மதி. அவள் வாசலைத் தாண்டி உள்ளே நுழையும் சமயத்தில் கூடத்தில் பேச்சுக்குரல் கேட்டுத் தயங்கினள். அத்தையும், பட்டு வாத்தியாரின் தாயாரும் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது பேச்சின் மூலம் செய்தியை அவள் உணர்ந்து கொண்டாள். இடிவிழுந்த பனை மரம் போல அவள் கொஞ்ச நேரம் செயலற்று நின்றாள். இப்படிப்பட்ட பேரதிர்ச்சி தனக்கு வரும் என்று அவள் இதுவரை எதிர்பார்க்கவே இல்லை. தன் தந்தையாரின் மனமாற்றத்திற்குக் காரணம் என்ன என்பதை, அவளால் அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை. அவருக்குத் தந்தையின் செயல் விண்மீனை விட்டு விட்டு மின்மினியைத் தேடுவது போல இருந்தது. தன் வாழ்வு பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாக இருக்கும் என்று கருதி ஆசைக் கனவுகளை வளர்த்துக் கொண்டிருந்த அவள் நெஞ்சம் எங்கே கருகிப்போய் விடுமோ என்று அஞ்சினள்.

கைப்பட்ட அமுதை விட்டுவிட்டு கூழை விரும்புவதையும், எதிர்பட்ட விளக்கைவிட்டு விட்டு நெருப்பை விரும்புவதையும் அவள் மனம் அறவே வெறுத்தது.

வீட்டுக்குள் நுழைந்தாள் எழில்மதி. "வேண்டிய சாமான்களை எல்லாம் பெட்டியில் எடுத்து வைத்துக்கொள். விடியற் காலம் புறப்படணும்" என்றாள் அத்தை. தன் அறைக்குள் சென்று தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு ஏதோ சிந்தனையில் ஈடுபட்டாள்.

அவள் அவனோடு என்னவோ பேசவேண்டுமென்றுதான் கற்பனைக் கோட்டை கட்டி இருந்தாள். தன் பிரேமையைக் கொட்டிக் காட்ட ஒரு கோடியுகம் இருந்தாலும் கூடப் போதாதுபோல்தான் தோன்றியது. ஆனால் அவனது காலடியில் கழித்த அந்த ஒரு மணி நேரத்தை வெறும் மௌனத்திலும், வீண் கதைகளிலும் போக்கி விட்டோமே என்று வருந்தினள். கடலை வியாபாரிகள் பயன்படுத்தும் மரச் செப்பு பார்வைக்குப் பெரிதாகத்தான் இருக்கிறது. கடலை மட்டும் ஒரு பிடி கூட இருப்பதில்லை. பேச வேண்டும் என்ற காதலர்களின் வேட்கையும் கடலையை அளந்து கொட்டும் மரச் செப்பு போன்றதுதானே?

(தொடரும்)

# மதனவல்லி

தமிழ்மன்னன்

தாராபுரம் என்ற நகரத்தைச் சுந்தரன் என்ற நற்குணமுடைய மன்னன் ஆண்டு வந்தான். அவன் செங்கோலாட்சி செய்தான். அவனுக்கு மனைவி மதன வல்லபி என்பவள். அவள் நற்பண்புடைய பெண்டிர்க்கெல்லாம் வைர முடியாக விளங்கினாள். இவர்களுக்குக்கீர்த்தி பாலன், மகா பாலன் என்ற நற்பண்புடைய மைந்தர் இருவர் இருந்தனர்.

மன்னன் சுரந்தன் தன் மனைவியைத் தவிர மற்றைய பெண்களைத் தங்கையாகக் கருதினான்; அவன் தன் புகழை விண்ணுலகிலும் நிலை நாட்ட எண்ணினான்.

ஒரு நாள் நள்ளிரவில் ஒரு குரல் கேட்டது. அஃது வருமாறு, "உன்னைத் துன்பம் எதிர்த்து நிற்கும்" அது உன் முன் வினைப் பயன், ஆனால், உன் மனைவி, உன் இளமைப் பருவம் கழியும் வரையில் அதைத் தடுத்து நிறுத்து வேண்டிருக்கும் என்பதாகும்.

மன்னன் அதைப் பற்றி அடிக்கடி எண்ணிப் பார்த்தான். அதை, அவன் மனம், "கலங்காது ஏற்றுக் கொள்ள வேண்டியது தான்" என முடிவு செய்தது.

அவன் தன் அமைச்சர்களில் சிறந்தவனாகிய சுபுத்தி என்பானிடம் அரசாட்சியை ஒப்படைத்தான். புனித வாழ்வைக் குறிக்கும் ஆடையை யணிந்து கொண்டான். தன் மனைவி, மக்களை அழைத்துக் கொண்டு, புல் நிரைந்த தரையை நோக்கி நடந்து சென்றான். அவன் நீண்ட தொலை நடந்து சென்ற களைப்பால் பாதையின் ஓரம்படுத் துறங்கினான். அப்பொழுது அவனுக்குரிய உணவுப் பொருளையும் முத்திரை பதித்தமோதிரத்தையும் திருடன் ஒருவன் கவர்ந்து கொண்டு போய் விட்டான்.

சிறிது நேரத்தில் குழந்தைகள் பசியாலடங்கின. கற்பிற் சிறந்த அவன் மனைவி, குழந்தைகளைத் தட்டிக்கொடுத்து, அழாமல் இருக்குமாறு விளையாட்டுப் போக்குக் காட்டுக் கொண்டிருந்தாள். மன்னன் விழித்தெழுந்து பார்த்தான். என்ன செய்வான்? பிறகு தன் மனைவி, மக்களுடன் பிருதிவிபுர நகரை யடைந்தான்.

பிருதிவி நகரத்தின் வெளிப் புறமதிர் சுவர் ஓரமாகக் கிரிராசன் என்ற வணிகன் தங்கியிருந்தான். அவன் நாடு கடத்தப்பட்டவன். ஆனால் அவனை நகருக்கு வெளியே தங்கியிருக்க அவ்வூர் மன்னன் அனுமதித்ருந்தான்.

மன்னன் சுந்தரனுக்கு வேலை செய்து பழக்கமில்லை. அவன் மக்களோ இளையவர், எனவே அவன் மனைவி வீட்டை துப்புரவு செய்தல், மாட்டுத் தொழுவத்தைத் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளைச் செய்து அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய செல்வத்தை ஈட்டினாள். இவளை வேலை வாங்கியவர்கள் அன்பாக நடத்தினர்; இவளுக்கு வேண்டிய துணி மணிகளைக் கொடுத்தனர்; நீர் சோறு அளித்தனர்.

அவள் வேலை செய்த இடத்திற்கு அருகில் ஒரு வணிகக் கூட்டம் வந்து தங்கியது. அக் கூட்டத்தின் தலைவன் சோம தேவன். அவன் மதன வல்லபியிடம் காதல் கொண்டான். ஆனால், அவள் அதை வெறுத் தொதுக்கினாள். அவனோ, அவளை மரியாதையுடன் நடத்துவதாக நடித்தான். கடைசியில்தான் தன் ஊருக்குச் செல்லுங் காலை அவளைத் தூக்கிக் கொண்டு செல்ல திட்டமிட்டுக் கொண்டிருந்தான் கடைசியில் அவன் திட்டமிட்ட படியே செய்து முடித்து விட்டான்.

சுந்தரன் தன் அருமை மனைவியின் பிரிவால் மிகவும் வருந்தினான். தன் விதியை நொந்துக் கொண்டான். ஆனால், அங்கேயே சின்னாட்கள் தங்கினான். வணிகர்களில் ஒருவனான கிரிராசன், சுரந்தன் மேல், இரக்

கங் கொண்டான்; அவனை ஆதரிக்கத் தொடங்கினன். அவ் வணிகன் சுந்தரனுக்குச் செய்யும் உதவிக்காக அவனும் அவன் மக்களும் வணிகன் கட்டும் கோயிலுக்கு வேலை செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்தான். சுந்தரனும் அவ்வாறே செய்தான். சுந்தரன் செயல் அவ்வணிகனை மகிழ்வித்தது.

ஒரு நாள் சுந்தரன் பிள்ளைகள் வேட்டையாடினர். அதைக் கண்ட வணிகன், அக்குழந்தைகளை யடித்தான்; அவர்கள் கையிலிருந்த வில்லையும் அம்பையும் முறித் தெறிந்தான். சுந்திரனை யழைத்து "இங்கு இருக்கக்கூடாது" என்று கூறி விட்டான்.

மீண்டும் சுந்தரன் தன் மக்களுடன் அலையத் தொடங்கினன். கொடிய விலங்குகள் வாழும் காட்டைக் கடந்து சென்றான். அப்பொழுது ஒரு ஆழமான ஆற்றை அவன் கடக்கவேண்டி வந்தது. அவன் ஒரு பையனைத் தோளில் தூக்கிக் கொண்டு ஆற்றின் எதிர்கரையில் விட்டு விட்டு வந்தான். இரண்டாவது மகனைத் தூக்கிக் கொண்டு திருப்பி வந்த பொழுது அவனை வெள்ளம் இழுத்து விட்டது. எதிர்பாராவிதமாக அவ்வாற்றில் அடித்துக் கொண்டு வந்த கட்டையால், இளையப் பையனைப் பிரித்து உயிர் பிழைத்தான். இவ்வாறு மூவரும் தனித்தனர். நன்மையில் நம்பிக்கையின்மையால் அவன்வருந்தினன். ஆனாலும் கொஞ்சங் கொஞ்சமாக மன உறுதியைப் பெற்றான்.

அவன் ஒரு கிராமத்தை யடைந்தான். அவனை ஒருவர் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்றார். அவள் மனைவியோ சுந்தரனை இழிவாக மதித்தாள்.

எனவே, சுந்தரன் அக்கிராமத்தை விட்டுக் கிரிபுரா நகரை யடைந்தான். அந்நகரத்தை யடுத்து ஒரு மாமரத்தின் அடியில் படுத்து றங்கினன். அப்பொழுது கிரிபுரத்து மன்னன் இறந்து விட்டான். அவனுக்கு தகுந்த வாரிசு இல்லை. எனவே, அவருடைய ஊழியர் அரசாட்சி செய்ய வாரிசை நியமிக்க வேண்டித் தகுந்த ஆளைத் தேடிக் கொண்டு வந்தனர்.

அவர்கள், யானை, குதிரை, வெண்சாமரை, வெண்குடை, தூனை, அரசர் மேல் ஊற்றும் தண்ணீர்க்குடம், அரண்மனைத் தலைவர்கள் முதலானோர் புடைசூழ ஊர்வலமாகச் சுந்தரன் தூங்கிக் கொண்டிருக்குமிடத்தை வந்தடைந்தனர். அப்பொழுது குதிரை கனைத்தது; யானை பிளறிற்று; தண்ணீர்க்குடம், தண்ணீரை யரசன் மேல்தானே ஊற்றிற்று; குடை சுந்தரன் மேல் நின்று நிழல் தந்தது. வெண்தாமரை தானே வீசிற்றி. இதனால், அரண்மனை ஊழியர் சுந்தரனை அவ்யானையின் மேல் ஏற்றிக் கொண்டு நகரத்தை நோக்கி ஊர்வலமாக நடந்தனர். அமைச்சர்களும், சான்றோர்களும் சுந்தரனை வரவேற்றனர்.

இவ்வளவு கொண்டாட்டத்திலும் அவன் மகிழ்ச்சி யடையவில்லை. அவன் தன் அருமை மனைவியிடமே ஆழ்ந்த எண்ணமுடையவனுயிருந்தான். வேறொரு திருமணத்தைப் பற்றி அவன் நினைத்தால், இரு மனைவியரைப் பெற்றவர், சிறையில் தள்ளப்பட வேண்டியவர் அல்லது நரகத்துக்குச் செல்ல வேண்டியவர் என்ற எண்ணம் அவனை அச்சுருக்கம்

சுந்தரனுடைய இரு பிள்ளைகள் தனித் தனியாகச் சுற்றி அலைந்து திரிந்தார்கள். கடைசியில் ஒரே நேரத்தில் இருவரும் கிரிப்புரா நகரை யடைந்தனர். இருவரும் நகரை சுற்றிப் பார்த்து வரும் பொருது ஒருவரை யொருவர் சந்தித்தனர். வணிகன் சோமதேவனும் தன் ஒட்டகத்தின் மேல் மதன வல்லபியுடன் அந் நகரை யடைந்தான். அவன் அப்பிள்ளைகளிடம் தன் ஒட்டகத்தைப் பார்த்துக் கொள்ளும் படியாகச் சொன்னன். பிள்ளைகள் இருவரும் பார்த்துக் கொள்வதாகச் சொல்லினர்.

இரவு நேரம். சிறியவன் மூத்தவனைப் பார்த்து ஒரு கதை சொல் என்று கேட்டான்.

அப்பொழுது மூத்தவன் தன் சொந்தக் கதையைக் கூறத் தொடங்கினான். வீட்டு வேலையைச் செய்து கொண்டிருந்த மதன வல்லபி வருத்தமாக எழுந்தாள், மேலும் அப்பிள்ளைகள் பேசிக் கொள்வதை உற்றுக் கேட்டாள், வெளியே வந்தாள், கண்ணீர்ப் பெருக்கோடு அவர்களைச் சேர்த்துத் தழுவிக் கொண்டாள். இந் நிகழ்ச்சியைக் கண்ட சோமதேவன் சீற்றங் கொண்டான். அவன் அப் பிள்ளைகளையும் அவளையும் மன்னன் முன் கொண்டு போய் நிறுத்தினான். அப் பிள்ளைகள் அரசனிடம், கூடாரத்தில் தங்கியிருந்த மங்கைக்கும் தங்களுக்கும் இடையே நடந்த நிகழ்ச்சியைச் சொன்னார்கள். அதைக் கேட்ட மன்னன் அவர்கள் சொன்னதைப் பற்றி சோமதேவனிடம் கேட்டான். சோமதேவன் தான் அவளை பிருதவி புரத்திலிருந்து ஒட்டகத்தின் மேல் தூக்கிக் கொண்டு வந்ததையும் அவள் தன் கற்பை உயர்ந்த குலப் பெண் ஒருத்தி காத்துக் கொள்வது போல் காத்துக் கொண்டதையும் எடுத்துரைத்தான். இவற்றைக் கேட்ட மன்னன் விடுதலை செய்து வீட்டிற்கு போகுமாறு சொன்னான். அவள் தனியாகப் போக மறுத்தாள். பிறகு மன்னன் அவளுடன் வணிகன் கூடாரத்திற்குச் சென்றான். அவள் படும் மன வேதனையையும் கண்டான். அவள் அவ் வணிகனுடன் வாழ வேண்டிய கடமையைப் பலவாறு எடுத்துச் சொன்னான். ஆனால், அவளோ அவ்வரசனின் பாதத்தையே பார்த்த வண்ணமாகக் கண்ணீர் விட்ட நிலையில் நின்றுக் கொண்டு தன் மனத்தோடு போராடிக் கொண்டிருந்தாள்.

இதைக் கண்ட மன்னன் மிகவும் மனமிரங்கிப் பணிந்து, அவளைப் பற்றித் தவறாகத் தான் எண்ணியதைக் கை விட்டு யானையின் மேல் அவளையும் பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு தன் அரண்மனையை யடைந்தான். தன் மக்களை அந் நாட்டு மாநிலங்களில் சிற்றரசர்களாக நியமித்தான். அவர்கள் தங்கள் நன்னடத்தையாலும், உண்மையாலும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.

இதற்கிடையில், தாராபுரத்தை ஆளும் படியாக விட்டு வந்த சுபத்தி என்ற அமைச்சர் சுந்தரனுடையகாலணியைச் சிம்மாதனத்தில் வைத்து நாட்டை ஆண்டு வரும் பொழுது, கிரி புரத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கேட்டறிந்தான்; உடனே தூதன் ஒருவனைச் சுந்தரனிடம் அனுப்பிப் பழைய படி நாட்டிற்கு வந்து, நாட்டை யாண்டு மக்கள் ஆவலைத் தணிக்குமாறு கேட்டுக் கொண்டான். சுந்தரனும் கிரி புரத்துக்குத் தன் மூத்த மகனை மன்னனாக்கி விட்டுத் தன் அருமை மனைவியுடனும் இரண்டா மகனுடனும் தாராபுரத்தையடைந்தான். அமைச்சர்கள், சான்றோர்கள், மக்கள் ஆகிய அனைவரும் மன்னனை மகிழ்வுடன் வரவேற்றனர்.

அடுத்த நாள் தூய்மையான முனிவர் ஒருவர் நகர்ப்புறத்துக்கு வெளியேயுள்ள பூங்காவில் வந்து தங்கினர். அவரை பார்க்கவும், அவர் ஆசியைப் பெறவும் சுந்தரன் சென்றான். அப்பொழுது சுந்தரன் அம்முனிவரைப் பார்த்துத் தன் முன் வினைப்பயன் பற்றிச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டான். அதற்கு அம் முனிவர் கூறியதாவது:

முன்னொரு காலத்தில் கேம்ப என்னும் ஊரில் கனகா என்னும் வணிகனும் அவன் மனைவி கிரி என்பவளும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மிகத் தூய்மையாக அன்புடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இளமையினால் அழகுக்கு அடிமைப் பட்டனர். அவர்கள் தான நீவீர், எனவேதான் வேண்டாத நிகழ்ச்சி நடந்தது. ஆனால், அவர்களுடைய மேன்மைப் பண்பும், ஒழுக்கமும் எங்களைக் காப்பாற்றின." என்றார்.

பின்னர், சுந்தரனும் அவன் மனைவியும் அன்புடன் அவரை வணங்கி விடைப் பெற்றுச் சென்றனர்; நீண்ட நாள் மகிழ்வுடனும் இன்பமாகவும் வாழ்ந்து விண்ணுலகு அடைந்தனர்.

ஊருக்கு நல்லது சொல்ல

# புயல்

தேசிய முற்போக்கு வார இதழ்

விரைவில் வெளிவருகிறது

ஏஜென்சி, சந்தா விபரங்களுக்கு

'புயல்' 33, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

Published by Sakunthala Krishnan, 27, Rajagopal Naicken St., Chintadripet, Madras-2, Printed by R. Ravi at Sudar Printers, 33, Jones Street, Madras-1. Acting Editor: Sakunthalakrishnan, Founder: Kannikannan